பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 294

புதன்கிழமை
17 செப்ரெம்பர் 2025

புரட்டாதி 01 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

புதன்பொய்கை

## ஹெகலியவுக்கு கிட்டியது பிணை

கொழும்பு, செப். 17
முன்னாள் சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல மற்றும் அவருடன் தொடர்புடைய பிரதிவாதிகளை பிணையில் விடுவிக்க கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தர 15

# மணல் மாபியாக்களை அடக்க இராணுவத்துணை வேண்டுமாம்!

### பருத்தித்துறைப் பொலிஸார் கைவிரிப்பு!

**யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 17**

**வடமராட்சி பிரதேசத்தில் இடம்பெற்றுவரும் சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுப்பதற்கு இராணுவத்தின் உதவி அவசியம். இராணுவத்தின் உதவி இல்லாமல் எதுவும் செய்ய முடியாது என்று பருத்தித்துறை பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரி பிரியந்த அமரசிங்க தெரிவித்தார்.** 15

## நிறைவேற்று அதிகாரமுறை ரத்துச் செய்யப்படவேண்டும்

### நாமல் வலியுறுத்து



கொழும்பு, செப். 17
நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை இரத்துச் செய்யப்படவேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதிக்குரிய சிறப்புரிமைகளை கட்டம், கட்டமாக நீக்கு 15

## நாமல் - சந்தோஷ் ஜா நேரில் கலந்துரையாடல்

கொழும்பு, செப். 17
இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஸ் ஜா ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச ஆகியோருக்கு இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

'இந்தியத் தூதுவருடனான சந்திப்பு சிறப்பான ஒன்று. இந்தியாவுடனான எங்கள் நீண்டகால நட்பையும், வலுவான இருதரப்பு உறவுகளை 15

## செப். 20ஆம் திகதிமுதல் வடமாகாணத்தில் மழை

யாழ்ப்பாணம், செப். 17
எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை முதல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளிலும் மிதமானது முதல் கனமானது 15

### தேர்தல்களின்போது

## புலம்பெயர் இலங்கையர்களும் வாக்களிப்பதற்கு நடவடிக்கை!

கொழும்பு, செப். 17
இலங்கையில் இடம்பெறும் தேர்தல்களில், புலம்பெயர் இலங்கையர்கள் வாக்களிக்கும் வகையில் ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு தற்போதைய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

புலம்பெயர் இலங்கையர்களின் வாக்குரிமையும், வெளிநாடுகளில் உள்ள இலங்கைப் பணியாளர் 15



## மண்டைதீவுப் புதைகுழிகள்; நீதிமன்ற நடவடிக்கை இன்று

யாழ்ப்பாணம், செப். 17
தீவகப் படுகொலைகளுடன் தொடர்புடைய சடலங்கள் புதைக்கப்பட்ட மண்டைதீவுக் கிணறுகளை அகழ்ந்து, நீதியான விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என்று ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்ட நிலையில், இது தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகள் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளன.
1990ஆம் 15

## பண்ணை சுற்றுப் பகுதியில் எல்லைக் கற்களை அகற்றுக

### தொல்லியல் திணைக்களத்துக்கு யாழ்.மாவட்டச் செயலர் உத்தரவு



யாழ்ப்பாணம், செப். 17
யாழ்ப்பாணம் பண்ணைச் சுற்றுவட்டாரப் பகுதியில் தொல்லியல் திணைக்களத்தால் நடப்பட்ட எல்லைக் கற்களை அகற்றுமாறு யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் 15

### இ.போ.ச.

## பருத்தித்துறைச் சாலையில் கடும் ஆளணிப் பற்றாக்குறை

### ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், செப். 17
68 சாரதிகள் இருக்க வேண்டிய இடத்தில் 37 சாரதிகளை மட்டுமே வைத்துக்கொண்டு பணியில் ஈடுபட்டுவருகின்றோம் என்று இ.போ.ச. பருத்தித்துறைச் சாலை முகாமையாளர் தெரிவித்துள்ளார். 15

### முச்சந்தி முரளி

'அப்ப பேசாமல் அரசாங்கம் பொலிஸைக் கலைச்சுப்போட்டு ஆமியை மட்டும் வைச்சிருக்கலாம் எண்டு சொல்லுகினம் போல'

## உருக்குலைந்த நிலையில் ஆணின் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், செப். 17
யாழ்ப்பாணம் இருபாலை கிழக்குப் பகுதியில், உருக்குலைந்த நிலையில் ஆணொருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

முத்தையா உதயகுமார் (வயது - 52) என்ப 15

### 2,234 மில்லியன் ரூபா செலவில்

## யாழ்ப்பாணம் பல்கலையில் அமைகின்றது புதிய கட்டடம்



யாழ்ப்பாணம், செப். 17
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் துணை சுகாதார விஞ்ஞான பீடத்துக்காக 2 ஆயிரத்து 234 மில்லியன் ரூபா செலவில் ஐந்து மாடிகளைக் கொண்ட அதி நவீன கட்டடம் அமைக்கப்படவுள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளரான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-

2006ஆம் ஆண்டில் அரச பல்கலைக்கழகங்களில் துணைச் சுகாதார விஞ்ஞானம் தொடர்பான பட்டப்படிப்புகள் ஆரம்பிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் பல்கலைக் 15

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 16.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4196 |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கங்கள் | 36 56 65 67 |
| விசேட எழுத்து | L |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 16.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1263 |
| வெற்றி இலக்கினம் | கடகம் |
| வெற்றி இலக்கங்கள் | 10 43 48 59 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 16.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0222 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கங்கள் | 2 2 9 5 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 16.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2302 |
| ஆங்கில எழுத்து | M |
| சுப்பர் இலக்கம் | 24 |
| வெற்றி இலக்கங்கள் | 40 44 58 65 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 16.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5954 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கங்கள் | 9 1 3 6 6 4 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 16.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1984 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கங்கள் | 05 22 34 60 |
| விசேட எழுத்து | N |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 16.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0529 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கங்கள் | 3 6 6 4 |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 16.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0070 |
| வெற்றி இலக்கினம் | துலாம் |
| வெற்றி இலக்கங்கள் | 01 15 20 43 |

# மக்களிடையே சென்றடையும் தரம் குறைந்த மருந்துகள்!

## மருத்துவர்கள் சங்கம் தெரிவிப்பு

**கொழும்பு, செப். 17**

**தனியார் மருந்தகங்களில் வழக்கத்துக்கு மாறாக குறைந்த விலையில் விற்கப்படும் சில மருந்துகளைப் பரிசோதித்ததில், சில மருந்துகளில் சரியான சேர்மானங்கள் இல்லை என்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது, இது நோயாளியின் பாதுகாப்பு குறித்துக் கடுமையான கவலைகளை எழுப்பியுள்ளது என்று மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான தொழில்முறை மருத்துவர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் அதன் தலைவர் மருத்துவ நிபுணர் சமல் சஞ்சீவ தெரிவிக்கையில்,

தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையகத்தில் முறையான பதிவு இல்லாமல் முகவர்களால் சில மருந்துகள் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படுகின்றன. போதுமான மேற்பார்வை இல்லாமல் தனியார் மருந்தகங்களில் விற்கப்படுகின்றன. லேபிள்களில் உற்பத்தி செய்யும் நாடு காட்டப்பட்டாலும், அத்தகைய விவரங்கள் உள்ளூரில் போலியாக இருக்கலாம். தரம் குறைந்த மருந்துகள் ஒருபோதும் அதிகாரபூர்வ மருத்துவமனை வழிகள்மூலம் வழங்கப்படுவதில்லை. இருப்பினும், பொதுமக்களைப் பாதுகாக்க வலுவான ஒழுங்குமுறை நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். சிறுநீரகம், கல்லீரல் மற்றும் இதய நோய்கள் போன்ற கடுமையான நோய்களுக்கான அத்தியாவசிய மருந்துகளை அரசாங்கம் நேரடியாகக் கொள்முதல் செய்து மருத்துவமனைகளுக்கு வழங்கினால், நோயாளிகள் பாதுகாப்பற்ற மருந்துகளுக்கு வெளியே பணம் செலவழிக்கவேண்டிய கட்டாயம் ஏற்படாது - என்றார். (ச-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 16.09.2025 | செவ்வாய்க்கிழமை | 0662 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| C | 5 1 4 3 1 5 | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 16.09.2025 | செவ்வாய்க்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2928 | G | 07 37 38 64 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 16.09.2025 | செவ்வாய்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| V | 38 43 44 45 | 5089 |

| SASIRI | |
|---|---|
| திகதி | தினம் |
| 16.09.2025 | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0771 | 05 08 25 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 16.09.2025 | செவ்வாய்க்கிழமை | |
| மேஷம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| ♈ | 14 15 18 46 | 4640 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 16.09.2025 | செவ்வாய்க்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| W | 09 | 05 08 19 50 | 2104 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 16.09.2025 | செவ்வாய்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| K | 25 29 34 50 | 2754 |

# சுமார் 30 ஏக்கர் காணிகள் கிளிநொச்சியில் விடுவிப்பு

கிளிநொச்சி, செப்.17

கிளிநொச்சி மாவட்டத்தில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டிருந்த சுமார் 30 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பொன்னாவெளிக் கிராம அலுவலர் பிரிவிலுள்ள 7 ஏக்கர் காணிகள் கடந்த 7ஆம் திகதி விடுவிக்கப்பட்டுப் பிரதேச செயலரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அந்தக் காணிகள் தற்காலிகமாக மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்திடம் பொறுப்பளிக்கப்பட்டுள்ளன.

நல்லூர் கிராம அலுவலர் பிரிவிலுள்ள முக்கொம்பன் பகுதியில் இராணுவத்தினரிடம் இருந்த 20 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இயக்கச்சியில் இராணுவத்தினரின் வசமிருந்த தனியாருக்குச் சொந்தமான காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன என்று கிளிநொச்சி மாவட்டச் செயலர் சு.முரளிதரன் தெரிவித்துள்ளார். (எ-இ)

# பெரமுனக் கட்சி புதிய அவதாரம்

கொழும்பு, செப்.17

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் புதிய அரசியல் திட்டமான 'மஹிந்த காற்றிலிருந்து நாமலின் வாசனை' எனும் திட்டம் விரைவில் தொடங்கப்படும் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுன வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் உள்ள உத்தியோகபூர்வ இல்லத்தை விட்டு வெளியேறிய பின்னர், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தங்காலையில் வசித்து வருகின்றார்.

அங்கு அவர் கட்சி ஆதரவாளர்களுடன் மீண்டும் அரசியல் செயற்பாடுகளையும் கூட்டங்களையும் ஆரம்பித்துள்ளார்.

அதேவேளை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ஆட்சியை இழந்த பின்னர் 'மஹிந்த சுலங்க' இயக்கம் ஆரம்பிக்கப்பட்டதைப் போலவே, இந்தப் புதிய அரசியல் முயற்சியும் விரைவில் மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)



# அரசியலுக்கு மைத்திரி 'குட் பாய்'

கொழும்பு, செப்.17

செயற்பாட்டு அரசியலில் இருந்து தான் ஒதுங்கவுள்ளேன் என்றும் எந்தவொரு தேர்தலிலும் இனிப் போட்டியிடமாட்டேன் என்றும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,


ஊழல், மோசடியற்ற அரசியல் கலாசாரத்தை உருவாக்குவதற்கு நான் ஒத்துழைப்பு வழங்குவேன். எனக்கு எந்தவொரு பதவியும் தேவையில்லை. இனித் தேர்தல்களில் போட்டியிடப்போவதும் இல்லை. 50 வருடங்கள் நாடாளுமன்றத்தில் இருந்துவிட்டேன். ஜனாதிபதிப் பதவியையும் வகித்துவிட்டேன்.

அரச மாளிகையில் இருந்து வெளியேறத்தயாராகிவருகின்றேன். புதிய வீட்டில் ஏற்பாட்டு நடவடிக்கை முடிந்ததும் சென்றுவிடுவேன்- என்றார். (ச-44)

# 11 இளைஞர்கள் கடத்தி காணாமலாக்கல் மேல்முறையீட்டு மனு விசாரணைக்கு!

கொழும்பு,செப்.17

2008 முதல் 2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் 11 இளைஞர்கள் கடற்படையினரால் கடத்திச்செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட இளைஞர்களின் பெற்றோரால் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர்நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.



சம்பவத்துடன் தொடர்புடையவர்களாகக் குறிப்பிடப்பட்ட சந்தேகநபர்களின் பெயர்ப்பட்டியலிலிருந்து முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொடவின் பெயர் நீதிபதியால் நீக்கப்பட்டதை இரத்துச்செய்யுமாறு கோரி, பாதிக்கப்பட்ட இளைஞர்களின் பெற்றோரால் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு மீதான விசாரணை உயர்நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த மனுமீதான விசாரணை அடுத்த வருடம் ஜனவரி மாதம் 30ஆம் திகதி இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் முறைமை மாற்றமே மாகாணத் தேர்தலுக்குத்தடை

## தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், செப்.17**

**விருப்பு முறைமை வாக்களிப்பாக இருந்த மாகாணசபைத் தேர்தல் முறைமையை விகிதாசார முறைமையாக்க எடுக்கப்பட்ட தீர்மானமே மாகாணசபைத் தேர்தல் காலந்தாழ்த்தப்படுவதற்குக் காரணம் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.**




யாழ்ப்பாணத்துக்கு நேற்றுமுன்தினம் வந்திருந்த தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எல்லை நிர்ணய வரையறைகள் சீர்திருத்தம் தொடர்பான பிரச்சினை இருக்கின்றது. இது தீர்க்கப்பட்டால் உடனடியாகத் தேர்தல் நடைபெறும். அதற்குத் தேர்தல்கள் திணைக்களம் தயாராக இருக்கின்றது.

அல்லது நாடாளுமன்றத்தில் தனிநபர் பிரேரணை நிறைவேற்றி மீண்டும் பழைய முறைமையை நடைமுறைப்படுத்த நாடாளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றினால் பழைய முறைமையில் தேர்தலை நடத்தமுடியும். அதற்கு ஏற்ற கால அவகாசமும் உள்ளது - என்றார். (எ-இ)

# மந்துவில் படுகொலை நினைவு உணர்வுபூர்வம்!



முல்லைத்தீவு, செப்.17

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு மந்துவில் படுகொலையின் 26ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு உணர்வெழுச்சியுடன் நேற்றுமுன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது பொதுச்சுடர் ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து படுகொலைச் சம்பவத்தின்போது உயிர்நீத்தவர்களின் திருவுருவப் படங்களுக்கு, உயிர்நீத்தவர்களின் உறவுகள் மலர்மாலை அணிவித்து, மலர்தூவி, கண்ணீர் சொரிந்து அஞ்சலி செலுத்தினர். 1999ஆம் ஆண்டு செப்ரெம்பர் 15ஆம் திகதி மந்துவில் சந்திப் பகுதியில் இலங்கை வான்படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் 24 தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# நெடுஞ்சாலை விபத்தில் பெண்ணொருவர் பலி!

கொழும்பு, செப்.17

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் நேற்று இடம்பெற்ற லொறி-ஹைஏஸ் விபத்தில் ஹைஏஸில் பயணித்த 35 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொழும்பை நோக்கிச் சென்ற ஹைஏஸ் முன்னால் சென்ற லொறியின் பின்புறத்தில் மோதி இந்த விபத்து சம்பவித்தது. (ச-இ)

# மாணவர்களுக்கு ஈ – சிகரெட்டுகள்; பெண் கைது



கொழும்பு, செப்.17

திவுலப்பிட்டியப் பகுதியில் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து இலத்திரனியல் சிகரெட்டுகளை விற்பனை செய்துவந்த 32 வயதுடைய பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய சுற்றிவளைப்பு நடவடிக்கையில் குறித்த பெண் கைதுசெய்யப்பட்டார். விசாரணையில் 5ஆயிரத்து 500 முதல் 7ஆயிரம் ரூபா வரையான இலத்திரனியல் சிகரெட்டுகளை அவர் விற்பனை செய்துவந்துள்ளார் என்றும் வெளிநாட்டில் உள்ள அவரது கணவர் மூலம் இந்தச் சிகரெட்டுகளை அவர் பெற்றுள்ளார் என்றும் தெரியவந்துள்ளது.

திவுலப்பிட்டியப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)

# அரச அலுவலகங்களில் டிஜிற்றல் கையொப்பம்

கொழும்பு, செப்.17

அரச அலுவலகப் பணிகளை எளிதானதாகவும் வினைத்திறனானதாகவும் மாற்ற டிஜிற்றல் கையொப்பம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பொது நிர்வாக, மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் மருத்துவர் சந்தன அபேரத்ன கூறுகையில்,

மக்கள் எதிர்பார்க்கும் திறமையான பொதுச் சேவையை உருவாக்குவதே எமது நோக்கம். அலுவலகப்பணிகளை எளிதாகவும் வினைத்திறனாகவும் மாற்றுவதற்காக மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் உள்ள அதிகாரிகளின் கையொப்பங்களை டிஜிற்றல் மயமாக்கும் செயல்முறை ஆரம்பிக்கப்படவுள்ளது. இதனூடாகக் கடிதங்களைச் செயலாக்குவதில் ஏற்படும் தாமதத்தைத் தவிர்க்கலாம் - என்றார். (ச-இ)




## பாளியில ஒரு வாளிவைப்பு

**சா**ட்சிக்காரன் காலில விழுகிறதைவிட சண்டைக்காரன் காலில விழுந்தால்தான் காரியம் உடன நடக்கும். இந்த உண்மை எங்கட பக்கத்து நாட்டுக்காரருக்கு நல்லாவே தெரியும். திசைகாட்டி அரசாங்கம் வந்தபிறகு, பக்கத்து நாட்டுக்காரருக்கு இஞ்ச இருந்த மதிப்புக் குறைஞ்சிட்டுது. அது பக்கத்து நாட்டுக்காரருக்கும் வடிவாத் தெரியும். பக்கத்து நாட்டுக்காரர் இஞ்ச செய்ய இருந்த அபிவிருத்தித் திட்டங்களுக்கெல்லாம், திசைகாட்டிக்காரர் ஏதோ ஒருவகையில இடைஞ்சல் குடுத்து அதைச் செய்யாமல் இழுத்தடிக்கினம்.

பலாலியில எயார்போர்ட்டை பெரிசாக்கிறதுக்கு பக்கத்து நாட்டுக்காரர் ரெடியா இருக்கினம். திசைகாட்டிக்காரரும் "இந்தா செய்யிறம் அந்தா செய்யிறம்" எண்டு சொல்லிக்கொண்டு இருக்கினமேதவிர, பலாலி எயார்போட்டைப் பெரிசாக்கிறதுக்கு ஒரு நடவடிக்கையும் எடுக்கேலை. அதைமாதிரி மண்டைதீவிலையும் கிரிக்கெட் கிரவுண்ட்டை பக்கத்துநாட்டுக்காரர்தான் கட்டித்தாறதெண்டு முதல் ஒரு கதை அடிபட்டது. ஆனால் இப்ப அவையைக் காய்வெட்டிப் போட்டு, தாங்கள் மட்டும் செய்யிறதா அரசாங்கம் அறிவிச்சிருக்குது. மன்னாரில அதானி நிறுவனம் செய்யவிருந்த காற்றாலை மின்சாரத்திட்டத்துக்கு சனம் எதிர்ப்பெண்டு சொல்லி, கனக்க நிபந்தனையள் போட்டதால, அந்தத் திட்டத்தில இருந்தே அதானி நிறுவனம் பின்வாங்கிட்டுது. இப்பிடிப பக்கத்து நாட்டுக்காரர் செய்ய நினைச்ச வேலையளுக்கெல்லாம் முட்டுக்கட்டை போட்டு, அவையைக் கொஞ்சம் தள்ளிவைக்கிறதே திசைகாட்டிக்காரரின்ர வேலையா இருக்குது.

இதை இப்பிடியே விட்டால், நாணயக் கயித்தை அறுத்துக்கொண்டு சீனாவின்ர பக்கமா இலங்கை ஓடிடும் எண்ட பயத்தில பக்கத்துவீட்டுக்காரர் இப்ப வேற ஒரு பிளானைக் கையில எடுத்திருக்கினம். போன ஞாயிற்றுக்கிழமை (14 ஆம் திகதி) கொழும்பில ஒரு புத்தகவெளியீட்டுவிழாவை பக்கத்துநாட்டுக்காரர் நடத்தி இருக்கினம். புத்தகம் வெளியிட்டதுக்கும், இலங்கையை வளைக்கிறதுக்கும் என்ன சம்பந்தம்? சம்பந்தம் இருக்குது. அவை வெளியிட்டது, 'பாலவதரோ' எண்ட பழைய பாளி இலக்கணப்புத்தகம். பிக்குகள் படிக்கிற பள்ளிக்கூடத்தில அது ஒரு முக்கியமான புத்தகம். ஆனால் இவ்வளவுநாளும் கொஞ்சப் புத்தகம்தான் (அதுவும் கடும் பழசு) இருந்தது. அதால அதைப் பக்கத்துநாட்டுக்காரர் திரும்பப்புதிசா அச்சடிச்சுக் குடுத்திருக்கினம். அப்பிடி புதுசா அச்சடிச்ச புத்தகத்தை மல்வத்து, அஸ்கிரிய பீடங்களின்ர மகாநாயக்கர்களிட்டதான் கையளிச்சு, ஐஸ் வைச்சு ஆசியை வாங்கியிருக்கினம். என்னதான் ஆட்சியில ஆர் இருந்தாலும், இந்த மல்வத்து, அஸ் கிரிய மகாநாயக்கர்களின்ர கையிலதான் நாட்டின்ர சூத்திரக்கயிறு இருக்குது. அதால அந்த மகாநாயக்கர்களைக் குளிர்விச்சு, திரும்ப இலங்கையைத் தங்கட பக்கம் கொண்டுவரத்தான் இப்பிடிப் பாளிமொழிப் புத்தகங்களை பக்கத்துநாட்டுக்காரர் அச்சடிச்சு இலங்கைக்கு வாளிவைக்கினம் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமான நாளாக இருக்கும். உறவினர்கள்வகையில் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். சகோதரவகையில் ஆதாயம் ஏற்படும். ஆனால், புதிய முயற்சிகள் எதுவும்வேண்டாம். பயணத்தின்போது கவனம் தேவை.

**இடபம்:** கணவன்மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். புதிய முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் ஆதாயம் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**கடகம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாள். முயற்சிகளில் வெற்றி உண்டாகும். சிலருக்கு உறவினர்கள்வகையில் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. வாகனத்தில் செல்லும்போது கவனமாக இருக்கவும்.

**சிம்மம்:** மனதில் சிறு குழப்பம் ஏற்பட்டு நீங்கும். குடும்ப விஷயமாக வெளியூர்ப்பயணம் மேற்கொள்ள நேரிடும். தாய்மாமன்வழியில் சுபச்செய்திவரும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவுமிருக்காது.

**கன்னி:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். கணவன் மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்து வேறுபாடு நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். நீண்ட நாள்களாக எதிர்பார்த்த நல்ல செய்தி இன்று கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**துலாம்:** பிற்பகலுக்குமேல் புதிய முயற்சிகள் அனுகூலமாகும். முற்பகலில் வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சியுடன் செலவும் ஏற்படும். தாயின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள்.

**விருச்சிகம்:** இன்று எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம்செலுத்தவும். தாயின் உடல் நலனில் கவனம் தேவை. எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டாகும்.

**தனுசு:** உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். தேவையான பணம் இருந்தாலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படுவதால், கையிருப்புக் கரைவதுடன் கடனும் வாங்கநேரிடும். தாய்மாமன்வழியில் செலவுகள் ஏற்படும்.

**மகரம்:** எதிர்பாராத பணவரவு உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கும்பம்:** அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் சற்று இழுபறிக்குப் பின்னர் முடிந்துவிடும். தந்தைவழியில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். சகோதரவகையில் எதிர்பாராத செலவு ஏற்படும்.

**மீனம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபடவேண்டாம். சிலருக்கு எதிர்பாராத பணவரவுடன் திடீர்ச்செலவுகளும் ஏற்படும்.



# யாழ்.பல்கலைக்கழகத்தில் தியாகதீபத்துக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், செப். 17

தியாகதீபம் திலீபன் நினைவேந்தல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் உணர்வுபூர்வமாக நேற்றுமுன்தினம் கடைப்பிடிக்கப்பட்டது.

இதன்போது தியாகதீபத்தின் திருவுருவப் படத்துக்கு ஈகைச்சுடர் ஏற்றி, மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த அஞ்சலி நிகழ்வில் பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் பல்கலைக்கழக ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-25)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், செப்.17

கோண்டாவில் இந்துக் கல்லூரியில் பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. கல்லூரி அதிபர் நடேசு தயாலன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகக் கலைத்துறைப் பேராசிரியர் ஆர்.சர்வேஸ்வரா கலந்து கொள்ளவுள்ளார். (ச-25)



# திருச்சொரூப ஊர்வலம்

யாழ்ப்பாணம், செப்.17

துன்னாலை வடக்கு சதா சகாய மாதா ஆலய வருடாந்தப் பெருவிழா அண்மையில் இடம்பெற்றது.

துன்னாலை வடக்கு சதா சகாய மாதா ஆலய வருடாந்தப் பெருவிழா இடம்பெற்றுவந்தநிலையில் திருநாளின் இறுதிநாள் வழிபாடுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றன. அன்றைய தினம் சகாய மாதா திருச்சொரூப ஊர்வலமும் இடம்பெற்றது. (ச-40,100)



# 'வேர் முகங்கள்' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், செப்.17

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத் தலைவரும், சூழலியாளருமான பொன்னுத்துரை ஐங்கரநேசன் கலை, இலக்கியப் பேராளுமைகளுடன் நிகழ்த்திய நேர்காணல்களின் தொகுப்பான 'வேர் முகங்கள்' நூல் வெளியீட்டு நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சைவசித்தாந்தத் துறைத் தலைவர் கலாநிதி. தி.செல்வமனோகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மூத்த எழுத்தாளர் க.சட்டநாதன் நூலினை வெளியிட்டுவைத்தார். (ச-66,20,27)

# மோடியின் பிறந்தநாள் யாழில் பூசைவழிபாடு

யாழ்ப்பாணம், செப்.17

இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியின் 75ஆவது பிறந்த நாளை முன்னிட்டு இன்று புதன்கிழமை காலை 9.30 மணியளவில் வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தில் சகஷ்ட லிங்க சிறப்பு அபிஷேகப் பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. தொடர்ந்து மகேஸ்வரப் பூஜையும் நடைபெறும். வழிபாடுகளில் யாழ்.இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-41-66,159)



# 'கிளீன் ஸ்ரீலங்கா' நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், செப்.17

கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின்கீழ் யாழ். மாவட்டச் செயலகமும் வலிகாமம் மேற்கு பிரதேச செயலகமும் இணைந்து நடத்திய நடமாடும் சேவை நேற்று செவ்வாய்க்கிழமை சங்கானைப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. இந்த நடமாடும் சேவையை யாழ்.மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன், வலிகாமம் மேற்குப் பிரதேச செயலகத்தின் செயலாளர் ஆகியோர் கலந்துகொண்டு ஆரம்பித்துவைத்தனர்.

இதன்போது ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவைகள், ஓய்வூதியம் தொடர்பான சேவைகள், பிறப்பு, இறப்பு மற்றும் உத்தேச வயதுச் சான்றிதழ்கள் தொடர்பான சேவைகள், மோட்டார் வாகனப் பதிவு மற்றும் வாகன வருமான அனுமதிப்பத்திரம் தொடர்பான சேவைகள் உள்ளிட்ட பல சேவைகள் வழங்கப்பட்டன. (ச-41-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# வலுவான தீர்மானமே தேவை

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாகியுள்ள நிலையில், இலங்கைமீது மீண்டும் சர்வதேசத்தின் கவனம் திரும்பியிருக்கிறது. இலங்கையில் நடைபெற்றதாகக் கருதப்படும் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், வலிந்து காணாமல் ஆக்கப்படல், சட்டவிரோதக் கொலைகள், அடக்குமுறைகள் தொடர்பாக சர்வதேச அளவில் அளவில் ஆவணங்கள், விசாரணைகள், சாட்சியங்கள் வெளிவந்தபோதும், இதுவரைஅந்தக் குற்றங்களை இழைத்தவர்களைப் பொறுப்புக்கூறச்செய்வதற்கான அர்த்தமுள்ள முயற்சிகளை எடுக்காமை இலங்கைக்கு எதிரான மிகப்பெரும் குற்றச்சாட்டாக மாறியிருக்கின்றது.

இலங்கையின் இந்த மெத்தனப்போக்காலேயே 2015ஆம் ஆண்டு மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானம், சர்வதேசப் பங்குபற்றலுடன் கூடிய நீதிப்பொறிமுறைகளை வலியுறுத்தியது. ஆனால் இலங்கை அரசாங்கங்கள் அந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தாமல் காலந்தாழ்த்தவும், பலவீனப்படுத்தவுமே முயற்சித்தன. பல ஆணைக்குழுக்கள் இலங்கை அரசாங்கங்களால் நிறுவப்பட்டபோதும் அவை கண்துடைப்பு நடவடிக்கையாகவே இருந்தன. பாதிக்கப்பட்டவர்களுக்கு அவை நீதியை வழங்காத அதேநரம், குற்றங்களில் ஈடுபட்டவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் சூழல் இலங்கையில் உருவாக்கப்பட்டது. இலங்கையின் இந்தக் கள்ளத்தனத்தைப் புரிந்துவைத்துள்ள சர்வதேச மனித உரிமை அமைப்புகள், இலங்கைக்கு வழங்கப்பட்ட பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்தை குறைந்தபட்சம் மேலும் இரு ஆண்டுகளுக்கு நீடிக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை உறுப்பு மற்றும் கண்காணிப்பு நாடுகளிடம் கூட்டாக வலியுறுத்திருக்கின்றன. பாதிக்கப்பட்டோரின் நம்பிக்கையை நிலைநிறுத்தவும், உள்ளக மற்றும் சர்வதேச அழுத்தங்களை தொடரவும் இதுவே அவசியமானது என்றும் அவை சுட்டிக்காட்டியிருக்கின்றன. இலங்கையின் உள்ளகப்பொறிமுறை கடந்தகாலங்களில் தோல்வியடைந்திருக்கும் நிலையில், சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளின் கோரிக்கை சரியானதொன்றே.

இலங்கையில் தற்போது புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்திருந்தாலும் கடந்தகால மீறல்கள் தொடர்பான எந்தவிதக்காத்திரமான முன்னேற்றமும் அவதானிக்கப்படவில்லை. உள்நாட்டு பொறுப்புக்கூறல் முறைமைகள் உருவாக்கப்படும் என்று அரசாங்கம் கூறினாலும் அதற்கான முயற்சிகள் எடுக்கப்படுவதாக இல்லை. இந்த நிலையில், ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு மற்றும் கண்காணிப்பு நாடுகள், இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்திட்டத்தை நீட்டிக்க வலுவான தீர்மானத்தை ஆதரிக்க வேண்டியது அவசியமான ஒன்றே. சர்வதேச சமூகம் தன் பொறுப்பை விலக்கிக்கொள்ளாமல், இலங்கையில் நீதியும் பொறுப்புக்கூறலும் உறுதி செய்யப்படும்வரை கண்காணிப்பையும், விசாரணைகளையும், ஆவணப்படுத்தலையும் தொடரவேண்டும். இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை நீதி கிட்டாத நிலையில், அவர்களின் ஒரே நம்பிக்கையாக உள்ளது சர்வதேச சமூகம் வழங்கும் ஆதரவே. இலங்கைக்கு வழங்கப்பட்ட பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்தின் காலத்தை நீடித்து, இலங்கையைப் பொறுப்புக்கூறலை நோக்கி சர்வதேச சமூகம் நெறிப்படுத்தவேண்டும் என்பதே பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்பார்ப்பாகவும் இருக்கின்றது. சர்வதேச சமுதாயத்தின் ஒரு நெறிப்படுத்தல் கடமையாகும். இதுவே இலங்கையின் எதிர்காலத்தில் மனித உரிமைகள் பாதுகாப்புக்கு வலுவான அடித்தளமாகவும் அமையும். சர்வதேச சமூகம் இதற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டு, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் வலுவான தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டியது தவிர்க்கமுடியாத கடமையாகும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

**நாளொரு நல்வார்த்தை**

தீமை செய்பவர்களால் உலகம் அழிக்கப்படாது, ஆனால் எதையும் செய்யாமல் அதை வேடிக்கை பார்ப்பவர்களால் தான் அழிக்கப்படும்.

—அல்பேர்ட் ஐன்ஸ்டைன்—




## வளர்ச்சி நோக்கி நகரும் விவசாயம்,கைத்தொழில்

கொழும்பு, செப்.17

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2025ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் 2,883,669 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

விவசாயம்,கைத்தொழில்,மற்றும் சேவை நடவடிக்கைகள் அனைத்தும் முறையே 2.0 சதவீதம்,5.8 சதவீதம், 3.9 சதவீதம் என்று உயர்வடைந்துள்ளன.

இலங்கையின் தேசிய கணக்கு மதிப்பீடுகள் மற்றும் இரண்டாம் காலாண்டு (2025) தொடர்பில் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 2025ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் ஆண்டுக்கு ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதம் நேரான வளர்ச்சி 4.9 சதவீதமாக பதிவாகியுள்ளது என தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

மொத்த உள்நாட்டு உற்பத்தி நடப்பு விலையில், 2024ஆம் ஆண்டின் அதே காலாண்டில் பதிவுசெய்யப்பட்ட 6,661,030 மில்லியன் ரூபாவில் இருந்து 7,362,510 மில்லியனாக அதிகரித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## படையெடுக்கும் சுற்றுலாவிகள்

கொழும்பு, செப்.17

செப்ரெம்பர் மாதத்தின் முதல் இரண்டு வாரங்களில் மாத்திரம் நாட்டுக்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 75,358 ஆகப் பதிவாகியுள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.


அதன்படி, இந்த ஆண்டில் செப்ரெம்பர் மாதத்தில் இலங்கை வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1,641,881 ஆக அதிகரித்துள்ளது. (ச-இ)

## ஓமானிலிருந்து இலங்கைக்கு விமானசேவை

கொழும்பு,செப்.17

செக் குடியரசைச் சேர்ந்த ஸ்மார்ட்விங்ஸ் விமான நிறுவனம், கொழும்புக்கு வாராந்த விமானசேவைகளை முன்னெடுக்கவுள்ளது. போலந்தின் வார்சாவிலிருந்து ஓமான் நாட்டின் மஸ்கட் வழியாக இந்தச் சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. எதிர்வரும் டிசெம்பர் மாதம் 23ஆம் திகதி முதல் சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த விமானங்கள் ஓமான் தலைநகர் மஸ்கட்டில் இருந்து கொழும்புக்கும், கொழும்பிலிருந்து மஸ்கட்டுக்கும் இடம்பெறும் என்றும் விமான நிறுவனம் தெரிவித்துள்ளது. (க-இ)





### போதைப்பொருள் குற்றம்

## எட்டு மாதங்களில் 524 பெண்கள் கைது

கொழும்பு, செப்.17

2025ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில் 524 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

22 முதல் 60 வயதுக்குட்பட்ட பெண்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கஞ்சா போதைப்பொருள் தொடர்பில் 378 பெண்களும், ஹெரோய்ன் போதைப்பொருள் தொடர்பில் 434 பெண்களும், போதை மாத்திரைகள் தொடர்பில் 23 பெண்களும், ஹேஷ் போதைப்பொருள் தொடர்பில் 6 பெண்களும், கொக்கேயின் போதைப்பொருள் தொடர்பில் 2 பெண்களும், ஏனைய போதைப்பொருள்கள் தொடர்பில் 39 பெண்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ச-இ)

**நாளை** வியாழக்கிழமை பூரட்டாதி 2
18.09.2025
சுபநேரம் : 04.33 - 06.03
ராகுகாலம் : 12.03 - 01.33

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்பொழிவும் குருபூஜையும்

யாழ்ப்பாணம், செப்.17

சைவ வாழ்வியலில் திருவிளையாடற் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவஸ்ரீ. பால.திருகுணானந்தக்குருக்கள் நடத்தும் வாராந்தத் திருவிளையாடற்புராணச் சிறப்புச் சொற்பொழிவும் சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் குருபூஜை விழாவும் எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு அராலி கிழக்கு மலையாளங்காடு ஜயனார் கோவிலில் இடம்பெறவுள்ளன.

சிவநெறிப்பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ள நிகழ்வில் ஆன்மிக விருந்தினராகக் கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஸ்ட விரிவுரையாளர் சமூகமாமணி கலாநிதி பா. தனபாலன் கலந்துகொள்ளவுள்ளார். குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலைநிகழ்வும், சைவப்புலவர் பிரசங்க பூஷணம் செ.த.குமரனின் "சைவப்பெரியார் சிவபாதசுந்தரனா ரின் சமயப்பணி" எனும் விடப்பொரு ளில் சொற்பொழிவும், குருபூஜையை முன்னிட்டு மாணவர்களிடம் நடத்தப்பட்ட வினாடி வினாப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில் வழங்கலும் இடம்பெறவுள்ளன. தொடர்ந்து இளஞ்சைவப்புலவர் பிரசங்கச்சுடர் க. கயிலைவாசன் தொகுப்புரை ஆற்றுவார். (ச-41)

# வடக்கிலிருந்து உற்பத்திகள் ஏற்றுமதி: தென்கொரியாவின் வாய்ப்பைப் பெறுக!

## வர்த்தகர்கள் கோரிக்கை

**யாழ்ப்பாணம்,செப்.17**

**வடக்கிலிருந்து மூலப்பொருள்களாக தென்பகுதிக்கு எடுத்துச்செல்லப்பட்டு, அங்கிருந்து பெறுமதிசேர் பொருள்களாக ஏற்றுமதி செய்யப்படும் அனைத்துப் பொருள்களையும் இங்கேயே பெறுமதிசேர் ஏற்றுமதி செய்யும் முதலீட்டு வாய்ப்புக்குத் தென்கொரியாவிடம் கோரிக்கை முன்வையுங்கள் என்று வடக்கு மாகாண வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

தென்கொரியாவைச் சேர்ந்த முதலீட்டாளர்கள் வடக்கு மாகாணத்தில் முதலீடு செய்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ள நிலையில், அதை எவ்வாறு பயன்படுத்திக்கொள்வது என்பது தொடர்பிலான கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் கடந்த வாரம் இடம்பெற்றது. இதன்போது கருத்துத் தெரிவித்த ஆளுநர், தென்கொரியாவைச் சேர்ந்த முதலீட்டாளர்கள் இங்குள்ள நிறுவனங்கள் ஊடாகவே தமது முதலீட்டை மேற்கொள்வதற்கு விரும்புகின்றனர்-என்றார். இதன்போது வடக்கிலிருந்து மூலப்பொருள்களாக தென்பகுதிக்கு எடுத்துச் செல்லாது இங்கிருந்தே பெறுமதிசேர் ஏற்றுமதிக்கு முதலீட்டு வாய்ப்புக் கோரிக்கை முன்வைக்கலாம். அத்துடன்காங்கேசன்துறைத்துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கான முதலீட்டையும் கோரலாம்.

வடக்கில் ஏற்கனவே அமைக்கப்பட்டு பயன்படுத்தப்படாதுள்ள அல்லது கைவிடப்பட்டுள்ள தொழிற்சாலைகள் மற்றும் கட்டடங்களைப் பயன்படுத்தி, ஏற்றுமதி நோக்கிலான செயற்பாடுகளுக்கும் முதலீட்டைக் கோரலாம் என்றும் வர்த்தகர்கள் ஆலோசனை முன்வைத்தனர். (ச-க-113)

## வடமராட்சியில்

# மீனவரின் தூண்டிலில் சிக்கிய இராட்சத சுறா!

யாழ்ப்பாணம்,செப்.17

வடமராட்சி பருத்தித்துறையைச் சேர்ந்த மீனவர் ஒருவரின் தூண்டிலில் இராட்சத சுறா வகை மீன் ஒன்று கடந்த வாரம் அகப்பட்டுள்ளது. பருத்தித்துறைத் துறைமுகத்துக்கு அருகாமையில் தூண்டிலில் மீன்பிழித்துக் கொண்டிருந்தபோதே இந்தச் சுறா சிக்கியுள்ளது. இந்தச் சுறா 250 கிலோவுக்கு அதிக எடைகொண்டதாகக் காணப்படுவதுடன் இதன் சந்தை மதிப்பு சுமார் இரண்டரை இலட்சத்துக்கும் அதிகம் என்றும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (ச-க-100)



# மரண அறிவித்தல்



## செல்லத்துரை தனபாலன்

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், இத்தாலி Rome, ஜெர்மனி Dortmund ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்டும் செல்லுத்துரை தனபாலன் அவர்கள் (11-09-2025) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான செல்லுத்துரை - தனலட்சுமி தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான குணரட்ணம் - யோகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், கலாநிதி அவர்களின் அன்புக் கணவரும், அச்சுதன் அவர்களின் அன்புத் தந்தையும், தங்கரத்தினம், காலஞ்சென்ற தர்மபாலன், தேவராசா, கலாநிதி, கமலாம்பிகை, காலஞ்சென்ற விக்கினேஸ்வரன் ஆகியயோரின் அன்புச் சகோதரரும், பிரேமலலோசினி, பிரேமலதா, கலைவதனி ஆகியயோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற கணேசானந்தன், மனோன்மணி, கமலாதேவி, ஜெயசேனன், இராசதுரை ஆகியயோரின் அன்புமைத்துனரும், சுதாகரன், கண்ணதாசன், ரவிச்சந்திரன் ஆகியயோரின் அன்பு சகலனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் புதன்கிழமை (17.09.2025) அன்று 01.00 மணிக்கு கிரியைகள் ஆரம்பிக்க பட்டு 03.00 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யபடும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் தாழ்மையுடன் அறிவிக்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**021 222 5555**

**46, பொற்பதி வீதி,**
**கொக்குவில்**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி





**அமரர் சபாரெத்தினம் பாலாபரணம்**

மலர்வு 27.09.1942 உதிர்வு 09.08.2025

**அமரர் பாலாபரணம் நிருபன்**

அன்னை மடியில் 25.09.1984 அமலன் அடியில் 18.08.2025

**ஆகியோரின் 31ம் நாள் நினைவஞ்சலி**
**(17.09.2025)**

ஆகியோரது வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (17.09.2025) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய கோயில் (புதுக்கோயில்) மண்டபத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இடம்பெற்று தொடர்ந்து மதிய போசன நிகழ்வும் இடம்பெறும். இந் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**ஆடியபாதம் வீதி,**
**கொக்குவில்.**

(CS/30766) J-1

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைவிடப்பட்ட திட்டங்களால் அரசாங்கத்துக்கு நிதி இழப்பு

## அமைச்சர் நளிந்த சுட்டிக்காட்டு

கடந்த கால ஆட்சியாளர்களால் ஆரம்பிக்கப்பட்ட 17 திட்டங்கள் இடைநடுவே கைவிடப்பட்டுள்ளன. உரிய காலப்பகுதிக்குள் அவற்றை நிறைவுசெய்யத் தவறியதால், சுமார் 29 பில்லியன் ரூபா பணத்தை மேலதிகமாக செலவிட வேண்டி ஏற்பட்டுள்ளது என்று சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

களுத்துறை நாகொட போதனா மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.


இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்தகால ஆட்சியாளர்கள் பிரதேச ரீதியான தீர்மானங்களை எடுத்ததால் பல திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாதிருந்தது. ஆனால் எமது அரசாங்கம் அவ்வாறு செயற்படவில்லை. மொரட்டுவைப் பல்கலைக்கழக மருத்துவ பீட கட்டுமானப்பணி விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. மருத்துவ ஊழியர்கள் பற்றாக்குறையால் சிகிச்சைகள் இடைநிறுத்தப்பட்டுள்ள கல் அஸ்ஸ மகப்பேற்று மருத்துவமனையின் தேவைகள் விரைவில் நிவர்த்தி செய்யப்படும். நாகொட மருத்துவமனையில் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள மருத்துவ பிரிவு, தாதியர் பாடசாலைக் கட்ட நிர்மாணப் பணிகள் 2027ஆம் ஆண்டுக்குள் நிறைவு செய்யப்படும்- என்றார். (எ-இ)

**வீடு வாடகைக்கு தேவை**

யாழ்நகரை அண்டிய பகுதியில் 4 பேர் கொண்ட சிறிய குடும்பம் வசிக்கக்கூடிய வீடு வாடகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு:
**077 317 3156**



# அதிகாரிகள் அசண்டை; களத்தில் விவசாயிகள்!

முல்லைத்தீவு, செப்.17

முல்லைத்தீவு மாவட்டத்தின் வட்டுவாகல் கமக்கார அமைப்பின்கீழுள்ள நந்திக்கடல் பகுதி நோக்கிச் செல்லும் வயல் நிலத்துக்கான வீதியைச் சீர் செய்து தருமாறு திணைக்கள அதிகாரிகளுக்குக் கூறியும் இதுவரை நடவடிக்கை எடுக்காதநிலையில் மழைகாலம் ஆரம்பிக்க முன் விவசாயிகள் ஒன்றுசேர்ந்து குறித்த வீதியைச் சீர்செய்யும் பணியில் களமிறங்கியுள்ளனர்.

இந்த வீதியினை நம்பியே 150 ஏக்கர் வரையான விவசாயிகள் மானாவாரி நெற்செய்கையை மேற்கொண்டு வருகின்றார்கள்.

இந்த விவசாய வீதியைப் புனரமைத்துத்தருமாறு பல தடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தும் இதுவரை நடவடிக்கையில்லை.

இந்த வீதி புனரமைக்கப்பட்டால் சுற்றுலாப் பயணிகளும் நந்திக்கடலைப் பார்வையிட வழிசமைக்கும்.

அந்தவகையில் மழைகாலம் நெருங்கும் நிலையில் விவசாயிகள் ஒன்றிணைந்து கனரக இயந்திரம் கொண்டு குறித்த வீதியைச் சீர்செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (ச-19)

**வேலையாட்கள் தேவை**

கொழும்பு, யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா நகரில் அமைந்துள்ள PPT நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

- முகாமையாளர்
- அலுவலக உதவியாளர்
- பேருந்து நடத்துனர்
- காசாளர்

(உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.)
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

**தொடர்பு:077 386 6250**

(CS 59300) A


# காட்டுத்தீ

கொழும்பு, செப். 17

தியதலாவ வெலன்ஹின்னப் பகுதியில் காட்டுத் தீப்பரவலில் ஐந்து ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்பு எரிந்து நாசமாகியுள்ளது.

இந்தத் தீ விபத்து நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஏற்பட்டதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (ச-இ)

## மரண அறிவித்தல்



தோற்றம் 02 . 03 . 1942
மறைவு 16 . 09 . 2025

**பற்குணம் சரோஜாதேவி (சரசு)**

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், ஈச்சமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட பற்குணம் சரோஜாதேவி (சரசு) அவர்கள் நேற்று (16.09.2025) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - பூரணம் தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான இராமசாமி - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பற்குணத்தின் பாசமிகு மனைவியும், சாந்தினி (முன்னால் உதயன் பணியாளர்), லதாலினி, மோகன்ராஜ் (பிரான்ஸ்), மன்மதராஜ் (கண்ணன்) ஆகியோரின் பாசமிகு தாயும், மயில்வாகனம் (உதயன் பத்திரிகை பணியாளர்), சண்முகராஜா. விஜிதா (பிரான்ஸ்), குவேனி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான கமலநாதன், விமலநாதன், அருள்நாதன் (குட்டி), ரவீந்திரநாதன் (பாலன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சுஜீவன் - மிதிலா, ரஜீவகுமரன் - பிரியமதுரா, தனோஷன் - பத்மபிரியா, சபேசன் - சத்தியகௌரி (கனடா), கார்த்தீபன், தனேஸ், மிதுஷன், மதீஷன், மதுமிதா, ஹரினி, கீர்த்தனா, தனுசிஜன், ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், யதுஷன், வபிஷன். அப்ஷரா, பிரத்வின், கிர்த்வின், லக்ஸ்மிகா (கனடா) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.09.2025) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துசெல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.25, ஈச்சமோட்டை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
075 656 8164

(CR/45070) J-1

**மணமகள் தேவை**

ஜேர்மனியில் வசிக்கும் யாழ் (V) குடும்பத்தை சேர்ந்த திருமணமாகாத 45 வயதுடைய மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு:-
**074 225 1946, 077 977 0451**

(CS/59420) J-1

# அலங்காரமீன்கள் 4 இனங்கள் தடை


கொழும்பு, செப்.17

மீன்வளம், நீர்வாழ் உயிரினங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சினால் 4 ஆக்கிரமிப்பு அலங்கார மீன் இனங்களைத் தடை செய்யும் வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அதன் பிரன்ஹா மீன், நைப் மீன் , அலிகேட்டர் கார், ரெட்லைன் ஸ்நேக் ஹெட் ஆகிய மீன் இனங்களுக்கே விதிக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய மீன் இனங்களை இனப்பெருக்கம் செய்யவோ, வாங்கவோ, விற்கவோ ஏற்றுமதி செய்யவோ முடியாது.

இந்த மீன்கள் அதிகளவான இனப்பெருக்கத்தின் அடிப்படையில் வேகமாகப் பரவி மற்ற நீர்வாழ் உயிரினங்களுக்குத் தீங்கு விளைவிக்கும் திறன் கொண்டவை என்பதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## கண்ணீர் காணிக்கை



தோற்றம் 16 . 08 . 1953
மறைவு 15 . 09 . 2025

எமது பாடசாலை அதிபர் அருட்சகோதரி
**மேரி அஞ்சலிக்கா**
அவர்களின் அன்பு சகோதரர்
**அமரர் கிறிஷ்ரியன் றப்பாயல் ராஜன் அல்பிரட்**
அவர்கள் கடந்த (15.09.2025) திங்கட்கிழமை காலமானார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலை சமூகம்,**
**யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்**

(CS/59415) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுப்பிரமணிய பாரதியார் நினைவேந்தல் நிகழ்வு

புதுக்கவிதையின் முன்னோடியும், வலிமையான தன் எழுத்துகள்மூலம் மக்கள் விடுதலைக்கு வழிவகுத்தவருமான மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 104ஆவது நினைவுநாள் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணம் நல்லூர் அரசடிச்சந்தியில் அமைந்துள்ள மகாகவி பாரதியாரின் உருவச் சிலையடியில் கடைப்பிடிக்கப்பட்டது.

தமிழ்ப் புலமையாளர் கே.எஸ்.சிவஞானராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பாரதியாரின் உருவச்சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு, மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து பாரதியார் இயற்றிய கவிதைகள் பண்ணுடன் பாடப்பட்டன. (ச-41-66)



# வள்ளுவர் சிலை யாழில் திறப்பு

யாழ்ப்பாணம், செப்.17

பிரதேசசபை முன்னாள் உறுப்பினர் கே.எஸ்.அஜித்குமாரின் தாயினுடைய பிறந்ததினத்தை முன்னிட்டு கருங்கல்லினாலான வள்ளுவர் சிலை வலிகாமம் வடக்கு மாவிட்டபுரம் வள்ளுவர் சனசமூக நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை திறந்துவைக்கப்பட்டது. நிகழ்வில் சனசமூக நிலைய நிர்வாகத்தினர், கிராம மக்கள், சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-41-27)

Airport & Aviation Services
(Sri Lanka)(Private) Limited

## வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி

## வீடுகள் / கட்டிடங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (,லங்கை) (தனியார்) கம்பனியின் யாழ்ப்பாணம் சர்வதேச விமானநிலையத்தின் பதவியணியினருக்காக வதிவிட வசதிகளை வழங்குவதற்கு வாடகை அடிப்படையில் பொருத்தமான வீடுகள் / கட்டிடங்களைப் பெற்றுக்கொள்வதற்காக கம்பனியின் மூலம் முன்மொழிவுகள் அழைக்கப்படுகின்றன.

உரிய வீடுகள் / கட்டிடங்கள் மிகவும் சிறந்த நிலையில் இருப்பது அவசியம் என்பதுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேவைப்பாடுகள் நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

01. யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திற்கு அண்மையில் மற்றும் யாழ்ப்பாணம் விமான நிலையத்திற்கு எளிதாக அணுக முடியுமாக இருக்க வேண்டும். பாலாலி / காங்கேசந்துரை மற்றும் யாழ்ப்பாண போன்ற பகுதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
02. வரவேற்பறை / உணவறை / படுக்கையறைகள் (குளிரூட்டப்பட்ட அறைகள் விரும்பப்படுகின்றன) இணைக்கப்பட்டுள்ள குளியலறை அல்லது பொதுவான குளியலறைகள் மற்றும் சமையலறை
03. அனைத்து விதமான வீட்டுத் தளவாடங்களுடன் இருத்தல் வேண்டும். (தளபாடங்கள், வீட்டுப் பொருட்கள், மின்சாதனங்கள், சமையலறைப் பாத்திரங்கள் போன்றவை)
04. போதுமானளவு வாகனங்களை நிறுத்தும் வசதிகள்
05. தொடர்வாரியான நீர் / மின்சார விநியோகம்
06. அனைத்து பராமரிப்பு பணிகளையும் வீட்டு உரிமையாளரே செய்ய வேண்டும்.
07. வீட்டிற்கு வெளியே சுத்தம் செய்யும் பணியை வீட்டு உரிமையாளர் செய்ய வேண்டியதுடன் குப்பைகளை அகற்றுவதற்கு பொருத்தமான அணுகுமுறையை ஏற்பாடு செய்து தொடர்ந்தும் பேணப்பட வேண்டும்.

வீடுகள் / கட்டிடங்கள் முதலாவதாக ஒரு வருட காலத்துக்காக வாடகை அடிப்படையில் எழுத்து மூலமான ஒப்பந்தமொன்றின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டு பின்னர் கம்பனியின் தேவைப்பாட்டின் அடிப்படையில் இரு தரப்பினரினதும் இணக்கப்பாட்டுடன் எழுத்து மூலமான ஒப்பந்தமொன்றின் மூலம் அக்காலத்தினை நீடித்துக் கொள்ள முடியும்.

கீழே தரப்பட்டுள்ள காரணங்கள் முன்மொழிவில் உள்ளடங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

01. வீடுகள் / கட்டிடங்கள் தொடர்பான முழு விபரம்

| | | | |
|---|---|---|---|
| 1) | பெயர் (வீட்டின் / கட்டிடத்தின் உரிமையாளர்) | 9) | படுக்கையறைகளின் எண்ணிக்கை (குளிரூட்டம் செய்யப்பட்ட/ குளிரூட்டம் செய்யப்படாத) |
| 2) | வீட்டு /கட்டிடத்தின் முகவரி | 10) | குளியலறைகள்/ கழிப்பறைகளின் எண்ணிக்கை (பொதுவான/ இணைக்கப்பட்ட) |
| 3) | உரிமையாளரின் தொலைபேசி இலக்கம் | 11) | வரவேற்பறை (உண்டு / இல்லை) |
| 4) | பிரதேச செயலகப் பிரிவு | 12) | சாப்பாட்டு அறை (உண்டு / இல்லை) |
| 5) | கிராமசேவகர் பிரிவு | 13) | சமையலறை (உண்டு / இல்லை) |
| 6) | பாலாலி விமான நிலையத்திற்குள்ள தூரம் (கி.மீ) | 14) | வாகன நிறுத்துமிட வசதிகள் (உண்டு / இல்லை) |
| 7) | மாடிகளின் எண்ணிக்கை | 15) | அனைத்துவித வீட்டுத்தளவாடங்கள் (உண்டு / இல்லை) |
| 8) | வீட்டின் பரப்பளவு (சதுரடி) | 16) | வேறு ஏதேனும் தொடர்புடைய விவரங்கள். |

02. வீட்டின் / கட்டிடத்தின் உரிமையாளரின் தேசிய அடையாள அட்டையின் பிரதி.
03. வீட்டின் / கட்டிடத்தின் உரிமையாளரி காணியுறுதியின் பிரதி.
04. வீட்டின் / கட்டிடத்தின் புகைப்படங்கள்.
05. எதிர்பார்க்கப்படும் மாதாந்திர வாடகை. (வீடு/கட்டிடத்தின் உரிமையாளருடன் கலந்துரையாடி முடிவு செய்யும் உரிமையை நிறுவனம் கொண்டுள்ளது)
06. எதிர்பார்க்கப்படும் முற்பணம் (வீடு/கட்டிடத்தின் உரிமையாளருடன் கலந்துரையாடி முடிவு செய்யும் உரிமையை நிறுவனம் கொண்டுள்ளது)

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட முன்மொழிவுத் தாள் முத்திரை குறியிடப்பட்ட உறை ஒன்றில் இட்டு இடதுபக்க மேல் மூலையில் வீடுகள் / கட்டிடங்களை பெறுவதற்கான முன்மொழிவுகள் என குறிப்பிட்டு "தவிசாளர், திணைக்கள பெறுகை குழு இலக்கம் 02, வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவு, வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (.லங்கை) (தனியார்)கம்பனி கட்டுநாயக்கவிற்கு **2025 ஒக்டோபர் மாதம் 07 ஆந் திகதி பி.ப 2.00 மணிக்கு** முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும்.

மேலதிக தவல்களைப் பெறுவதற்காக 011-2263550 / 011-2263513 என்ற தொலைபேசி இலக்கங்களை அழைக்கவும்

---

**தவிசாளர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (லங்கை) (தனியார்) கம்பனி**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க**



அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளையின் ஏற்பாட்டில் மறைந்த யாழ்.மாநகரசபை முன்னாள் முதல்வர் பொன். சிவபாலனின் 27ஆவது நினைவேந்தல் நிகழ்வு தலைவர் அமிர்தலிங்கம் மங்கையர்க்கரசி நினைவு இல்லத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. (ச-41)



வடமராட்சித் துன்னாலை வல்லிபுரம் ஆழ்வார் ஆலயத்தில் கிருஷ்ண ஜெயந்தி உற்சவம் சிறப்புப் பூஜைகளுடன் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. சுவாமி வீதியுலாவுடன், உறியடி உற்சவமும் இடம் பெற்றது. (எ-25,17)



கோப்பாய் சக்கர ஆழ்வார் ஆலயத்தின் வருடாந்தத் தேர்த்திருவிழா கடந்த சனிக்கிழமை பக்திபூர்வமாக இடம் பெற்றது. (எ-25,17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடந்தாண்டில் போதைப்பொருள்களுடன் 2,28,000 பேர் கைது!

யாழ்ப்பாணம், செப்.17

கடந்த 2024 ஆம் ஆண்டில் போதைப் பொருள்கள் வைத்திருந்த சம்பவம் தொடர்பில் 2 இலட்சத்து 28 ஆயிரம் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள் ளனர் என்று பொலிஸாரின் தரவுகள் குறிப்பிட்டுள்ளன.

இந்த கைது நடவடிக்கை 2023 ஆம் ஆண்டு காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது 41 சதவீத அதிகரிப்பாகும்.

68,132 சந்தேகநபர்கள் ஐஸ் போதைப் பொருள் வைத்திருந்த சம்பவம் தொடர் பில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை கடந்த ஆண்டில் 832.3 கிலோ ஹெரோயின், 8,359 கிலோ கஞ்சா மற்றும் 1,364 கிலோ கிரிஸ்டல் மெத்தம்பேட்டமைன் இரசாயனத்தால் தயாரிக்கப்பட்ட ஐஸ் போதைப்பொருள் கள் கைப்பற்றப்பட்டுள்ளன. (ச-இ)

## பேருந்து விபத்து; 15 பேர் படுகாயம்

கொழும்பு, செப்.17

ஹொரனை இரத்தினபுரி வீதியில் எப் பிட்டவலப் பகுதியில் நேற்றுமுற்பகல் இடம்பெற்ற பேருந்து விபத்தில் 15 பேர் காயமடைந்துள்ளனர்.

தனியார் நிறுவனம் ஒன்றின் ஊழியர் களை ஏற்றிச் சென்ற பேருந்து ஒன்று லொறி ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்கள் இடங் கொட மற்றும் இரத்தினபுரி மருத்துவம னைகளில் சிகிச்சைகளுக்காக சேர்க் கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கிரியெல்லப் பொலிஸார் விசாரணைகளை முன் னெடுத்து வருகின்றனர். (ச-இ)






## இறக்குமதியான வாகனங்களில் 30 வீதமானவை சுங்கத்தில் தேக்கம்

கொழும்பு, செப்.17

இந்த ஆண்டின் ஜனவரி முதல் ஜூன் மாதம்வரை நாட் டுக்குக் கொண்டுவரப்பட்ட வாகனங்களில் 30 வீதமா னவை சுங்கத்தால் விடுவிக்கப்படவில்லை என்று அர சாங்க நிதி பற்றிய குழுவின் இந்த வருடத்தின் முதலாவது அரையாண்டை உள்ளடக்கும் வகையில் முன்னெடுக்கப் பட்ட குழு மதிப்பாய்வுகளில் தெரியவந்துள்ளது.

நாடாளுமன்றச் செயலாளர் அலுவலகத்தின் அறிவித்த லுக்கமைய இந்த வருடத்தின் ஆரம்பத்திலிருந்து ஜூன் மாதம் வரையான காலப்பகுதியில் சுங்கத்துக்கு 996 பில்லியன் ரூபா வருமானம் கிடைத்துள்ளது. இது கடந்த வருடத்தின் முதல் 6 மாத வருமானங்களுடன் ஒப்பிடும் போது 47 சதவீத வளர்ச்சியாகும்.

இந்த வளர்ச்சியில் வாகன இறக்குமதியினூடாக 429 பில்லியன் ரூபா கிடைத்துள்ளது. வாகன இறக்குமதிக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்ட பின்னர் 2 லட்சத்து 20 ஆயிரத்து 26 வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு இலட்சத்து 54 ஆயி ரத்து 537 வாகனங்கள் விடுவிக்கப்பட்டுள்ளன. செயற்பாட் டுத் திட்ட மதிப்பாய்வின்போது அரச நிதி தொடர்பில் நாடாளு மன்ற குழு சுங்க விடுவிப்புக்கான தாமதம் தொடர்பில் வினவியபோது, மூன்று தினங்களில் வாகனங்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (எ-இ)

## துடுப்பாட்டப் போட்டி


கிளிநொச்சி,செப்.17

பூநகரி மத்திய கல்லூரி மற்றும் முரசு மோட்டை முருகானந்தாக் கல்லூரி அணி கள் மோதுகின்ற இரண்டாவது 'மருதங் களின் சமர்' துடுப்பாட்டப் போட்டி, பூநகரி மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளது.

இந்த வருடம் இரு கல்லூரிகளதும் பெண் களுக்கான மருதங்களின் சமர் துடுப்பாட்ட தொடரும் ஆரம்பித்துவைக்கப்படுகின் றது. இரண்டு போட்டிகளுக்குமான வெற் றிக்கிண்ணங்கள், இரு பாடசாலைகளதும் அதிபர்களால் நேற்றுமுன்தினம் அறி முகம் செய்யப்பட்டன. (க-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வளமான நாடும் அழகான வாழ்க்கையும் 'மறுமலச்சி நகரம்' என்ற தொனிப் பொருளிலான உள்ளூராட்சி வாரத்தையொட்டி கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையால் பாரதிபுரம் வட்டாரத்தை மையப்படுத்தி நடமாடும் சேவைகள், மின்னிணைப்பு, வீதிப்புனரமைப்பு, ஆதனவரி உள்ளிட்ட சேவைகள் மக்களுக்கு வழங்கப்பட்டன. (ச-41-113)



# முன்னாள் ஜனாதிபதிகளின் கௌரவத்தைக் காப்போம்!

## ஐ.ம.சக்தி தெரிவிப்பு

எமது ஆட்சியில் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சலுகைகளை வழங்கி அவர்களுக்குரிய கௌரவத்தைப் பாதுகாப்போம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகளை நீக்குவது தொடர்பில் இந்த அரசு கொண்டுவந்துள்ள சட்ட ஏற்பாட்டில் உள்ள சில விடயங்களில் எமக்கு உடன்பாடில்லை. முழுச் சலுகைகளையும் பறிப்பதற்காக அரசு சட்டத்தை உருவாக்கியுள்ளது. அவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சலுகைகள் கௌரவம் வழங்கப்பட வேண்டும். எமது ஆட்சியில் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சலுகைகளை வழங்குவோம் – என்றார். (ச–75)

# மன்னார் மாவட்டத்தில் மறைக்கல்வி வாரம்

மன்னார், செப்.17

கத்தோலிக்கத் திரு அவையானது செப்ரெம்பர் மாதம் 14ஆம் திகதி தொடக்கம் 21ஆம் திகதி வரை தங்கள் பங்குகளில் மறைக்கல்வி வாரத்தைக் கொண்டாடி வரும் நிலையில் பேசாலைப் பங்கில் பங்குத்தந்தை அருட்பணி எஸ்.சத்தியராஜ் அடிகளார் மறைக்கல்விக் கொடியை ஏற்றிவைத்து மறைக்கல்வி வாரத்தை ஆரம்பித்துவைத்தார். அதனைத் தொடர்ந்து திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இதேவேளை மறைக்கல்வி வாரத்தை முன்னிட்டு ஒவ்வொரு பங்குகளும் தங்கள் வசதிகளுக்கு ஏற்ப மறைக்கல்விப் போட்டிகள், மறைக்கல்வி சார்ந்த விளையாட்டுப் போட்டிகள் என்பவற்றை நடத்தவுள்ளன. இறுதிநாளாகிய எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கலைநிகழ்வுகள் நடத்தப்பட்டு போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படும். (ச-25, 60)

# மரண அறிவித்தல்

தோற்றம்
15 . 04 . 1944



மறைவு
16 . 09 . 2025

## திருமதி நகுலேஸ்வரி செல்லத்துரை

கரம்பனைப் பிறப்பிடமாகவும், நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நகுலேஸ்வரி செல்லத்துரை அவர்கள் நேற்று (16.09.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை-பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை-நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், செல்லத்துரை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை, கைலாசபிள்ளை (கமல் செரமிக்ஸ்), குமாரசாமி, கதிர்காமநாதன் மற்றும் கஜேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியும், துரைராசா, காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் சின்னத்தங்கம், கண்ணுத்துரை, இராசதுரை காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் கிருஷ்ணமூர்த்தி ஆகியோரின் மைத்துனியும், நந்தினி, நளாயினி, செல்வக்குமார் (சுமங்கலி ஜுவல்ரறி), குமுதினி, சுபாஜினி (அபிவிருத்தி உத்தியோகத்தர்-கோப்பாய் பிரதேச செயலகம்), சசிக்குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், பிரபாகரன், விஜயதாஸ், மதுரா, வர்ணசீலன், தனதீபன், பிரபாலினி ஆகியோரின் மாமியாரும், பிரவீனா, பிரதுஷன், மிதுஷன், டர்சனா, சங்கீதன், கவின்சன்,அஸ்மிதன், கிந்துஷா, நிருஷிகன், அகிஷா, அக்சயன், அஸ்வின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.09.2025) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 492 7843
077 391 5154

இல.539/4, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்

தோற்றம்
23 . 10 . 1940



மறைவு
15 . 09 . 2025

## கணேஸ் சர்வேஸ்வரி (ராசாத்தி)

கந்தர்மடத்தை பிறப்பிடமாகவும் நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கணேஸ் சர்வேஸ்வரி அவர்கள் கடந்த (15.09.2025) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துவேலு சாமியார் - லட்சுமி தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - ஆச்சிமுத்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை கணேஸ் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுந்தரேஸ்வரி, சற்குணேஸ்வரி, தியாகராசா ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, குமாரசுவாமி (மதிப்பு), பகவதி, மனோன்மணி, பரிபூரணம் மற்றும் தங்கம்மா ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற லோகேந்திரன் மற்றும், மகேந்திரன், இராஜேந்திரன், காலஞ்சென்ற தெய்வேந்திரன் மற்றும் சுரேந்திரன் (கனடா), ரவீந்திரன் (பிரான்ஸ்), சசிகலா ஆகியோரின் தாயாரும், லோகேந்திராணி, காலஞ்சென்ற புஷ்பராணி, கீதாம்பாள், இந்திராணி (கனடா), சந்திரகலை (பிரான்ஸ்), காலஞ்சென்ற சந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், புவிதா (கனடா), புவிந்தன் (கனடா), சுரேஸ்குமார், சதீஸ்குமார், அனுஸ்ரலா, சங்கீதா (கனடா), மாறன் (கனடா), மகிந்தன் (கனடா), கீர்த்தனா, மகீபா, மயூரன் (கனடா), கார்த்தீபன் (கனடா), லக்ஷனா (கனடா), நிரோஜன் (கனடா), நிரோஜா (பிரான்ஸ்), நிதுஷா (பிரான்ஸ்), நிதர்ஷன் (பிரான்ஸ்), ஜெகதா, நவலோஜினி (கனடா), சுதர்சன் (கனடா), பகீரதன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அனோஜ், அனோஜா, அஸ்வின், ஆயன், அனோஜ், அபீஸ், சாயி, சந்தோஷ், விஷ்னுஷாந், ஜெனுயா, கவிஷ்கன், ஜோனதன், ஆர்யன், ஆரத்யா, சபரீஷ்வரன், ஆரண்யா, சாய்ரா, ஆதிரன், ஹாசினி, பிரதீப், அனுஶ்ரீ, யஸ்வின், ஷர்வின், ஷாளினி, கிருஷ்ணா, கரிஸ், நிகாரிகா, அக்ஷரா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.09.2025) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 6696 338 (ராஜேந்திரன்)


(CS 59424) A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதன் பொய்கை
17.09.2025
புதன்கிழமை

எவர் ஒருவர் குறிக்கோளுடன் போராடுகிறாரோ அவரே வெற்றிபெறுகிறார், ஏனெனில் தாம் எங்கு செல்கிறோம் என்று அவருக்குத் தெரியும்!

- ஏர்ல் நைட்டிங்கேல்





# 400 ஆண்டுகளின் பின் தலைநிமிர்ந்த மரபுரிமைச் சின்னம்!

■ பேராசிரியர் ப.புஷ்பரட்னம்
*தலைவர்,*
*யாழ்ப்பாண மரபுரிமை மையம்*

பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றி வரும் க.ஜெகதீஸ்வரன் 2013ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை வருகைதரு விரிவுரையாளராகக் கடமையாற்றிய காலத்தில் வட்டுக்கோட்டைத் துணவி கிராமத்தில் பாழடைந்த ஆலயமும், அதன் பின்பக்கச் சுவரில் புரியாத எழுத்துப் பொறிப்புகளும் இருப்பதாக எம்மிடம் கூறியிருந்தார்.

அதன் அடிப்படையில் தொல்லியற் திணைக்கள ஆய்வு உத்தியோகத்தர்களுடன் அங்கு ஆய்வுகளை மேற்கொண்டிருந்தோம். அவ்வாறு ஆய்வுசெய்யப்பட்டு வந்த ஆலயமே இன்று பழமை மாறாத நிலையில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு தொல்லியல் திணைக்களத்தால் இலங்கையின் தேசிய மரபுரிமைச் சின்னங்களில் ஒன்றாகப் பிரகடனப்படுத்தப்படவுள்ள துணவி சிவன் ஆலயம்.

இதன் மூலம் 400 ஆண்டுகளுக்குப் பின்னர் வட இலங்கையில் தலைநிமிர்ந்து நிற்கப்போகும் யாழ்ப்பாண இராசதானி கால முக்கியமான மரபுரிமைச் சின்னம் என்ற பெயரை இந்த ஆலயம் பெறுவது தமிழ் மக்களுக்கும். சிவ பக்தர்களுக்கும் மகிழ்ச்சிதரும் செய்தியாகும்.

வடஇலங்கையில் வரலாற்றுத் தொன்மையும், பண்பாட்டுச் சிறப்பும் கொண்ட பிராந்தியங்களில் ஒன்றாக வலிகாமம் காணப்படுகின்றது. இலங்கையின் பூர்வீக மக்கள் குடியிருப்புகளைக் கொண்டிருந்த முக்கியமான இடங்களாக வலிகாமத்தில் உள்ள கந்தரோடையும், ஆனைக்கோட்டையும் அடையாளம் காணப்பட்டுள்ளன. கி.பி. 13ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் யாழ்ப்பாணம் என்ற பெயருக்குப் பதிலாக வலிகாமம் என்ற பெயரே வடஇலங்கையின் முக்கியமான பிராந்தியமாக பாளி, சிங்கள, தமிழ் இலக்கியங்களிலும், தமிழ், சிங்களக் கல்வெட்டுகளிலும் கூறப்படுகின்றது. மேலும் யாழ்ப்பாண அரசுகால நிர்வாகப் பிரிவில் வலிகாமமே பெரிய நிர்வாகப் பிரிவாகவும் இருந்துள்ளது.

வடஇலங்கையில் ஐரோப்பியர் காலப் பண்பாட்டை முதலில் உள்வாங்கிய பிராந்தியமாக வலிகாமம் காணப்பட்டாலும் ஐரோப்பியப் பண்பாட்டுக்கு எதிரான சுதேச பாரம்பரியப் பண்பாட்டின் மீள் உருவாக்கம் தோன்றவும் வலிகாமம் காரணமாக இருந்துள்ளது. கடந்த 30 ஆண்டுகால அனர்த்தத்தால் இடம்பெயர்ந்து வாழ்ந்த எம் மக்கள் மீளவும் தமது இருப்பிடம் திரும்பியபோது தமது இடப்பிடத்திற்கு முன்னர் தமது குலதெய்வத்திற்கான ஆலயத்தை மீளக்கட்டி அழகுபார்த்த பெருமைக்கு உரியவர்கள்.

அப்படியிருந்தும் வரலாற்றுப் பழமைவாய்ந்த துணவி கிராமத்தில் காணப்படும் சிவன் ஆலயமும், விநாயகர் ஆலயமும் யுத்த அனர்த்தத்திற்கு முன்னரே முழுமையாக அழிவடைந்திருந்தும் அவை ஏன் மீள்புனர்நிர்மாணம் செய்யப்படவில்லை என்பது அனைவருக்கும் ஆச்சரியமளிப்பதாக உள்ளது. தற்போது புனர்நிர்மாணம் செய்யப்பட்டிருக்கும் துணவி சிவன் ஆலயத்துக்கு தொன்மையான நீண்ட வரலாறு இருப்பதையும், அவ்வாலயம் யாழ்ப்பாணத்தின் முக்கியமான மரபுரிமைச் சின்னமாக ஏன் பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என்பதற்கான காரணங்களையும் வெளிப்படுத்துவதை எமது கடமையாகக் கருதுகின்றோம்.


## தொன்மை வாய்ந்தது

தென்னிந்திய ஆலயங்களின் தோற்றக் காலத்தையும், அவற்றின் வரலாற்றையும் விஞ்ஞானபூர்வமாக எடுத்துக் கூறுவதற்கு ஆலயங்களில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் முக்கிய சான்றுகளாகக் காணப்படுகின்றன. ஆனால் யாழ்ப்பாண ஆலயங்களில் அதுவும் பழமையான ஆலயங்களில் அரிதாகத் தானும் இதுவரை கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் முதன்முதலாகத் துணவி சிவன் ஆலயத்தின் கிழக்குப்பக்க கர்ப்பக்கிரகச் சுவரில் கிரந்த எழுத்துப் பொறித்த கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதுவே யாழ்ப்பாணத்தில் கண்டுபிடிக்கப்பட்ட தொன்மையான கிரந்தக் கல்வெட்டாகும். இதன் காலம் கி.பி.15 ஆம் 16 ஆம் நூற்றாண்டை அதாவது இற்றைக்கு நானூறு ஆண்டுகளுக்கு முற்பட்டதென இலங்கை, தமிழகக் கல்வெட்டு அறிஞர்கள் கணித்துள்ளனர்.

அப்படியானால் இவ்வாலயத்தை யாழ்ப்பாண இராசதானிக் காலத்துடன் தொடர்புபடுத்திப் பார்க்க இடமுண்டு.

அந்தக் கல்வெட்டில்தான் இவ்வாலயத்தின் பெயர் பிரகேஷ்வரன் எனக் கூறப்பட்டிருப்பது முக்கியமான வரலாற்றுத் தகவலாகும். இடைக்கால இலங்கை, தென்னிந்தியக் கல்வெட்டுக்களில் ஆலயத்தின் பெயரைக் கல்வெட்டில் கூறும் மரபு இருந்துள்ளது. அவற்றில் சிவனை முக்கியமான தெய்வமாகக் கொண்ட ஆலயங்கள் பலவற்றின் பெயர்கள் காணப்படுகின்றன. அவற்றுள் பிரகேஷ்வரன், பிரகதீஷ்வரர் என்பன இடைக்காலத்தில் சிவனைக் குறித்த முக்கிய பெயர்களாகும். அப்பெயர் துணவி சிவன் ஆலயக் கல்வெட்டிலும் இடம்பெற்றிருப்பது அதன் பழமைக்கு இன்னொரு சான்றாகும்.

இந்த ஆலயம் ஏறத்தாழ 50 அடி நீளமும், 42 அடி அகலமும் கொண்டது. ஆலயத்தின் கர்ப்பக்கிரகம் 6அடி நீளமும் நான்கரை அடி அகலமும் கொண்டது. ஆலயத்தின் கர்ப்பக்கிரகத்தைத்தவிர அந்தராளம், முன்மண்டபம், துணைக்கோவில்கள், சுற்றுமதில்கள், மடங்கள் என்பன பெரும்பாலும் அழிவடைந்தநிலையிலேயே காணப்பட்டன. ஆலயத்தின் பெரும்பகுதி கடலில் இருந்து எடுக்கப்பட்ட கோறல் கற்கள் கொண்டு கட்டப்பட்டிருந்தாலும் கர்ப்பக்கிரகம் மட்டும் பொழிந்த முருகைக் கற்களையும் சுண்ணாம்புக் கற்களையும் கொண்டு கட்டப்பட்ட நிலையிலேயே காணப்பட்டன. பொதுவாக இவ்வாலயத்தின் கட்டுமானமும் கலைமரபும் ஏனைய தமிழக, இலங்கை ஆலயங்களுடன் ஒப்பிட முடியாத அளவிற்கு சில தனித்துவமான அம்சங்களைக் கொண்டிருந்தன. சில இடங்களில் ஆகம மரபு காணப்படுகின்றன. வேறுசில இடங்களில் கிராமிய ஆலயச் சாயல் காணப்படுகின்றன. ஆலயத்தின் உயரம் குறைந்த பதிவான வடிவமைப்பு, புதுவகையான கூரை அமைப்புகள், அகன்ற உயரமான சுற்று, வாசல் பகுதிகள் ஜன்னல்கள் முதலியன மக்கள் வாழ்விடங்களுடனும், ஆலயக் கட்டுமானங்களுடனும் தொடர்புபட்டவையாக உள்ளன. சில கட்டட அம்சங்கள் கேரள ஆலய அமைப்பைப் பிரதிபலிப்பனவாக உள்ளன. இவை துணவிச் சிவன் ஆலயத்தின் தனித்துவத்தை மட்டுமன்றி அதன் தொன்மை வரலாற்றையும் பிரதிபலிப்பனவாக உள்ளன. மரபுரிமை என்பது இற்றைக்கு 100 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றுப் பெறுமதியுடைய சின்னங்களைக் குறிப்பதாகும். துணவிச் சிவன் ஆலயம் காலத்தால் பல தலைமுறை தாண்டிய விலைமதிக்கமுடியாத ஒரு சொத்து. அது ஓர் இனத்தின், ஒரு மதத்தின் அடையாளம். அதுவே எதிர்காலச் சந்ததியின் நம்பிக்கை நாற்று. ஆகவே அந்த பழையநிலையை இன்று நினைவுபடுத்தி புனர்நிர்மாணம் செய்யப்பட்டிருப்பது அனைவருக்கும் மகிழ்ச்சிதரும் நிகழ்ச்சியாகும். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொருளாதாரத்தில் மீட்சிக்கான பாதை

பகுதி: VII



பூங்கோதை இரத்தினவடிவேல்,
பிரதிப் பணிப்பாளர்,
தொடர்பாடல் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி

## கடன் மறுசீரமைப்பின் முக்கியமான நோக்கங்கள்

கடன் மறுசீரமைப்பானது பின்வரும் மூன்று முக்கியமான குறிக்கோள்களை நோக்காகக் கொண்டமைந்திருந்தது:

1. பொருளாதார மீட்சியை ஆதரிப்பதற்கும் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்குமான செயன்முறையை விரைவுபடுத்துதல்.
2. அனைத்து கடன் உடன்படிக்கைகளையும் சர்வதேச நாணயநிதியத்தின் கடன் நிலை பேறானதன்மை அளவுருக்களுடன் ஒருங்கிணைத்தல்.
3. அனைத்து கடன் வழங்குநர் குழுக்களிலும் தீர்வின் ஒப்பீட்டுத்தன்மையை உறுதிப் படுத்தல்.

இந்தக் குறிக்கோள்களை அடைவதற்காக, சர்வதேச நாணய நிதியத்தின் அளவுகோல்களு டன் நிலைத்திருப்பதை உறுதிசெய்வதற்கும், தீர்வின் ஒப்பீட்டுத்தன்மையுடன் இணங்குவதை உறுதி செய்வதற்கும் பல சுற்றுக் கடன் வழங்குநர் ஈடுபாடு மற்றும் முன்மொழிவுகளுக்கான திருத்தங்களை உள்ளடக்கிய ஒரு தொடர்ச்சியான மற்றும் வினைத்திறன்மிக்க அணுகு முறையை இலங்கை பின்பற்றியது.

ஒரு நடுத்தர வருமானம் கொண்ட நாடாக, குறைந்த வருமானம் கொண்ட நாடுகளுக்காக வடிவமைக்கப்பட்ட ஜி20 பொதுவான கட்டமைப்புக்கு இலங்கை தகுதியற்றதாகக் காணப்பட் டதனால், கடன் மறுசீரமைப்புச் செயன்முறையில் அதன் பல்வேறு உத்தியோகபூர்வ இரு தரப்புக் கடன் வழங்குநர்களிடையே ஒருங்கிணைப்பை மேற்கொள்வது மிகவும் சவாலான தாக இருந்தது. அதன்படி, இந்தப் பிரச்சினையைத் தீர்க்க பிரான்ஸ், ஜப்பான் மற்றும் இந் தியா போன்ற நாடுகள் இணைந்து தலைமைதாங்கும் வகையில் இலங்கை தனது சொந்த உத்தியோகபூர்வக் கடன் வழங்குநர் குழுவை உருவாக்கவேண்டியிருந்தது. இக்குழுவில் சீனா உத்தியோகபூர்வமாக இணையாவிடினும் தனியான பேச்சுவார்த்தைகளில் அரசுடன் ஈடுபட்டு, இறுதியில் மற்ற அதிகாரபூர்வ கடன் வழங்குநர்களால் முன்மொழியப்பட்ட கடன் மறுசீரமைப்பிற்கொத்த ஒரு கடன் மறுசீரமைப்பை முன்மொழிந்தது.

ஆரம்பத்தில், அரசு வெளிநாட்டுக்கடன் மறுசீரமைப்புக்காக ஒரு நேரடியான கடன் கரு வியைப் பயன்படுத்துவதற்கே முனைந்தது. எனினும், பேச்சுவார்த்தைகள் முன்னெடுக் கப்பட்டபோது, சர்வதேச முறிகளை வைத்திருப்பவர்கள் சர்வதேச நாணய நிதியத்தின் பொருளாதார அனுமானங்கள், குறிப்பாக பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் செலாவணி வீத எதிர்வுகூறல்கள் குறித்து தமது கரிசனைகளை வெளிப்படுத்தியதுடன் கடன் நிவாரணத்தை பொருளாதார செயற்றிறனுடன் இணைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட கருவிகளைப் பயன்படுத்துமாறு முன்மொழிந்தனர். இதற்கு பதிலளிக்கும் விதமாக, இலங்கை பேரண்டப் பொருளாதார குறிகாட்டிகளுடன் இணைக்கப்பட்ட முறிகளை அறிமுகப்படுத்தி யது. இது பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விளைவுகளின் அடிப்படையில் கடன் திருப்பிச் செலுத்துதல்களைத் தீர்மானிக்கின்றது. நாட்டின் பொருளாதாரம் சர்வதேச நாணய நிதியத்தின் அடிப்படை எறிவுகளைவிட சிறப்பாகச் செயற்பட்டால் கடன் வழங்குபவர்களுக்கு அதிக கடன் மீள்செலுத்தலினை வழங்குவதுடன் குறைவாகச் செயற்பட்டால் இலங்கைக்கு அதிக கடன் நிவாரணத்தையும் வழங்கும் பொறிமுறையினைக் கொண்டிருந்தது.

இந்த நெகிழ்வான செயன்முறை, எதிர்கால கடன் கொடுப்பனவுகள் குறித்த கவலைகளை நிவர்த்திசெய்யும் அதே வேளையில், கடன் வழங்குநர் குழுக்களிடையேயான நியாயமான அணுகுமுறையை உறுதிசெய்தது. இதற்கு மேலதிகமாக, ஆளுகையுடன் இணைக்கப்பட்ட முறிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. முன் வரையறுக்கப்பட்ட ஆளுகை தொடர்பான பிரமா ணங்களைக் குறிப்பிட்ட காலப்பகுதிற்குள் அரசு பூர்த்தி செய்யுமெனின் இம்முறியானது வட்டிக் கொடுப்பனவுகளை குறைப்பதற்கு வழிசெய்து, கட்டமைப்புச் சீர்திருத்தங்களுக்கான நாட்டின் உறுதிப்பாட்டை வலுப்படுத்துகின்றது. இந்த நடவடிக்கைகளுடன் அரசு டிசெம்பர் 2024ஆம் ஆண்டில் நாட்டுக்கான சர்வதேச முறிகளுக்கான மறுசீரமைப்பை வெற்றிக ரமாக முடிவுறுத்தியது. ஒரு சிறிய பகுதி நீங்கலாக டிசெம்பர் 2024 இல் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு நிறைவடைந்ததைத் தொடர்ந்து, நாட்டுக்கான கொடுகடன் தரமிடல் கள் மேம்பட்டன, பணவீக்கம் மிதமடைந்தன, வட்டி வீதங்கள் குறைவடைந்தன மற்றும் இலங்கையின் பொருளாதாரத் தோற்றப்பாடு கணிசமாக மேம்பட்டது. இருப்பினும், இந்த முன்னேற்றத்தைத் தக்கவைத்துக்கொள்வதென்பது, கட்டமைப்புச் சீர்திருத்தங்களைத் தொடர்ந்து செயற்படுத்தல் மற்றும் இறை ஒழுக்கத்தினைப் பேணுவதற்கான வலுவான அரசியல் அர்ப்பணிப்பு என்பனவற்றினைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும்.

இலங்கையின் இந்த அனுபவமானது தற்போதுள்ள உலகளாவியக் கட்டமைப்பின்கீழ் வராத கடன் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் பிற நடுத்தர வருமான நாடுகளுக்கு ஒரு சிறந்த மாதிரியை வழங்குகின்றது.

(மிகுதி அடுத்தவாரம்)

# மழைக்கால விபத்துகளில் அவதானத்துடன் இருப்போம்

மருத்துவர் பா.சயந்தன்
குழந்தைகள் சிறுவர்கள் சத்திரசிகிச்சை நிபுணர்
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மற்றும்
சிரேஷ்ட விரிவுரையாளர், மருத்துவபீடம், யாழ்ப்பாணம்



மழைக்காலங்கள் சாலை விபத்துகளுக்கு மிகவும் பொதுவான இயற்கைக் காரணங்களில் ஒன்றாகும். இதன் தாக்கம் பன்முகத் தன்மை கொண்டது. மழைக்காலங்களில் ஏன் வீதி விபத்துகள் அதி கம் நிகழ்கின்றன என்பது தொடர்பில் விளக்குகின்றது இந்தப் பதிவு.

### குறைவான தெளிவுநிலை

கனமழை, மூடுபனி மற்றும் பிற வாகனங்களிலிருந்து வரும் தெறிப்புகள் ஓட்டுநர்களின் பார்வையை மறைக்கின்றன. இதனால் பாதசாரிகள், சிக்னல் கள் மற்றும் பிற வாகனங்களைப் பார்ப்பது கடினமாகிறது.

### வழுக்கும் வீதிகள்

மழையானது தூசி, எண்ணெய் மற்றும் குப்பைகளுடன் கலந்து, ஆபத்தான வழுக்கும் சூழ்நிலையை உருவாக்குகிறது. இது பிரேக்கிங் தூரத்தை அதிகரிக் கிறது மற்றும் சில்லுகளின் பிடிமானத்தைக் குறைக்கிறது. அதிக வேகத்தில், வாகனங்கள் மெல்லிய நீர் படையில் சவாரி செய்து, சாலையுடனான நேரடி தொடர்பை இழந்து திடீரென கட்டுப்பாட்டை இழக்க நேரிடும்.

### குறைமதிப்பீடுகள்

பல சாரதிகள் ஈரமான சாலைகளின் ஆபத்தைக் குறைத்து மதிப்பிடுகின்றனர். வேகத்தில் தொடர்ந்து வாகனம் அபாயங்களைக் குறைத்து ஏற்படுகின்றது. அத்துடன் நீர்தேங்கிக் குழிகள், குப்பைகள் மற்றும் சீரற்ற சாலை மேற்பரப் புகளை மறைக்கிறது. இதனால் பெரும்பாலான வாகனங்கள் திடீர் விபத்தை எதிர்நோக்குகின்றன. மழைக்காலத்திலும் அதற்குப் பிறகும், குறிப்பாக மோச மான வடிகால் மற்றும் போதுமான சாலை பராமரிப்பு இல்லாத நகர்ப்புறங்க ளில், விபத்து அபாயம் கணிசமாக அதிகரிப்பதாக உலகளாவிய ஆய்வுகள் காட்டுகின்றன.

### தடுப்பதற்கான வழிமுறைகள்

ஓட்டுநர்களிற்கு அறிவூட்டுதல், உட்கட்டமைப்பு மேம்பாடுகள் மற்றும் பாதுகாப்பு விதிமுறைகளை அமுல்படுத்துதல் ஆகியவற்றின் கலவையே பயனுள்ள தடுப்புமுறையாகும்.

### ஓட்டுநர்களுக்கு

- வேகத்தைக் குறைத்து ஓடுவதற்கு அறிவூட்டல் மழையில் குறைந்தது 10-20 வீதம் மெதுவாகச் செலுத்தவேண்டும்.
- முன்னால் உள்ள வாகனத்திலிருந்து நீண்ட இடைவெளியை (இயல்பை விடக் குறைந்தது இரண்டு மடங்கு) வைத்திருங்கள்.
- ஹெட்லைட்களை முறையாகப் பயன்படுத்தவும் குறைந்த பீம் ஹெட் லைட்கள் தெளிவுநிலையை மேம்படுத்தவும், மற்றவர்கள் உங்கள் வாக னத்தைப் பார்க்கவும் உதவவும்.
- டயர்கள் மற்றும் பிரேக்குகளைச் சரிபார்க்கவும் சறுக்குவதைத் தவிர்க்க சரியான டயர் மற்றும் பிரேக் செயற்பாடு மிக முக்கியம்.
- தேங்கிய தண்ணீரைப் பற்றி எச்சரிக்கையாக இருங்கள், முடிந்தால் வெள் ளம் சூழ்ந்த சாலைகளில் வாகனம் ஓட்டுவதைத் தவிர்க்கவும்.

### அதிகாரிகளுக்கு

- சாலை மேம்பாடு: நீர் தேங்குவதைத் தடுக்க வடிகால் அமைப்புகளை மேம்படுத்தவும், குழிகளைக் குறைக்க சாலை மேற்பரப்புகளைப் பரா மரிக்கவும்.
- அறிவிப்புப் பலகைகள் மற்றும் விளக்குகள்: அதிக ஆபத்துள்ள பகு திகளில் எச்சரிக்கை பலகைகளை வைத்து போதுமான அளவு தெரு விளக்குகளை உறுதிசெய்யுங்கள்.
- பொது விழிப்புணர்வுப் பரப்புரைகள்: மழைக்காலங்களில் ஏற்படும் அபா யங்கள் குறித்து ஓட்டுநர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
- போக்குவரத்துச் சட்ட அமுலாக்கம்: மோசமான வானிலையின் போது வேகம், மற்றும் பொறுப்பற்ற முறையில் முந்திச்செல்வதைக் கண்டிப் பாகக் கண்காணித்தல்.

மழையைத் தடுக்கமுடியாது, ஆனால் மழை தொடர்பான சாலை விபத்துக ளைத் தடுக்கமுடியும். பொறுப்பான வாகனம் ஓட்டுதல், சரியான வாகன பராம ரிப்பு மற்றும் வலுவான சாலை பாதுகாப்புக் கொள்கைகள்மூலம், மழைக்கால விபத்துகளின் எண்ணிக்கையை நாம் வெகுவாகக் குறைக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் இரா.ஜெயக்குமார்
உரும்பிராய், யாழ்ப்பாணம்

# கவிஞர் வயவை லம்போ எழுதிய 'ஒரு குடை; ஒரு காதல்'

## பன்மைத்துவங்கள் நிறைந்த படைப்பு




கவிஞர் வயவை லம்போ எழுதிய 'ஒரு குடை; ஒரு காதல்' எனும் கவிதை நூல் வெளியீட்டு விழா அண்மையில் வயாவிளான் றோ.க.த.க. பாடசாலையில் இடம்பெற்றது. கவிஞர் வயவை லம்போ வயாவிளானில் இருந்து 1990ஆம் ஆண்டு, தனது பதின்மூன்றாவது வயதில், ஜேர்மனிக்குப் புலம்பெயர்ந்தவர். அங்கு வாசிப்பின் மூலமாக தன்னை வளப்படுத்தி, 'செங்கதிர்', 'நான் உறங்கிய தொட்டில்' எனும் இரு நூல்களையும் வெளியிட்டவர். அவற்றைத் தொடர்ந்து, அங்கிருந்து கொண்டேதான் பிறந்த வயாவிளானில், தான் படித்த பாடசாலையில் 'ஒரு குடை; ஒரு காதல்' நூலை வெளியிட்டுள்ளமை சிறப்பானதாகும்.

'ஒரு குடை; ஒரு காதல்' எனும் கவிதை நூல் 122 பக்கங்களைக் கொண்டது. இந்த நூலில் 48 கவிதைகள் உள்ளன. வயாவிளான் மக்கள் ஒன்றியமும், ஜீவநதி வெளியீட்டகமும் இணைந்து இந்த நூலை வெளியிட்டுள்ளன. அட்டைப் படத்தினை கவிஞரே சிறப்பாக வரைந்துள்ளமை ஓவியத்துறையில் இவர் பெற்றுள்ள ஆற்றலை எடுத்துக்காட்டுகிறது.

நூலின் பெயருக்கு ஏற்ப காதல் கவிதைகள் அதிகமாக உள்ளன. உதாரணமாக,

என் கையில்
ஒரேயொரு குடைதானிருக்கிறது
எனக்குள் நீ நெருங்குவாய்
என்ற நம்பிக்கையில்..

'ஏ...மழையே ஓயாது பெய்' என்ற வரிகள் அவரது வாலிப இரசனையின் வெளிப்பாடுகளாகும்.

மேலும், 'பழங்குடி' எனும் கவிதையில்,

'ஆதி வாசி வாழ்ந்துவந்த முறை
மீண்டும் வந்து சேராதோ?
சாதி என்ற சாக்கடையை
அவன்
அறிந்ததில்லை தெரியாதோ?
பாதிகாலத்தில் இந்த பாவி நாகரிகம்
பாருக்குள் வந்து புகுந்ததோ?
மீதிக்கால மனிதனின் வாழ்வியலை
நாசமாக்கிச் சென்றதோ?' என்ற வரிகள் அவரது சமூக நோக்கம் சார்ந்த ஏக்கத்தை வெளிப்படுத்துகின்றது.

இவ்வாறாக, தனது கவிதைகளை ஒரு யதார்த்தவாதியாகவும், பரந்துபட்ட சிந்தனையாளனாகவும் கவிஞர் வயவை லம்போ படைத்துள்ளார். சமூக அநீதிக்கு எதிராக அவர் வெளிப்படுத்தியுள்ள கவிதைகள், காலத்தால் நிலைத்திருக்கும்.

# பழமொழிகளில் பெண்கள்

பொனிஸ்ரெலா சந்தியாசன்

மக்கள் வாழ்வின் அனுபவங்கள், சிந்தனைகள், பண்பாடுகள் ஆகியவை அடங்கிய களஞ்சியமாக பழமொழிகள் விளங்குகின்றன. இவை தலைமுறை தலைமுறையாக வந்துசேரும் பொக்கிஷங்களாகவும் அமைந்துள்ளன. பழமொழிகளில் பெண்கள் வகிக்கும் இடம் அவர்கள் பற்றிய சமூகப் பார்வை என்பவற்றைத் தெரிந்து கொள்ள யாழ். மாவட்டத்தில் உள்ள நாவந்துறை, குருநகர் ஆகிய இரண்டு பிரதேசத்திலும் கள ஆய்வினை மேற்கொண்டிருந்தோம். அதில் பல சுவாரஸ்யமான முன்பு அறிந்திராத பழமொழிகளை அவதானிக்கவும், சேகரிக்கவும் முடிந்தது.

நாம் அப்பிரதேசத்திற்குள் செல்லும்போதே அங்கிருந்த ஒரு பாட்டி 'எங்க இருந்து வாறிங்க? கம்பஸ்ஸா 'கோழி மேய்க்கிற வேல எண்டாலும் கோப்ரேஷன் வேலை வேணும்' என்று எங்கள் தேவையை முன்பு அறிந்தவர் போல ஒரு பழமொழியை எமக்குக் கூறியிருந்தார். அவரிடம் இருந்தே எமது கள ஆய்வு தொடங்கியது.

*தாய் இருந்தால் பசிக்கு மருந்து*
*பெண்மையின் நாணம் குடும்பத்தின் கௌரவம்*
*கல்லாப்பெண் விளக்கில்லா வீடு*
*அம்மா சொல் அமுதோடு சமம்*

ஆகிய பழமொழிகளை எமக்கு அவர் தெரிவித்திருந்தார். ஆரம்ப காலங்களில் இத்தகைய பழமொழிகளில் ஒரு புறம் பெண்கள் தெய்வமாக, தாயாக, ஒழுக்கத்தின் தூணாக சித்திரிக்கப்பட்டாலும் மறுபுறம், அவர்களைக் குறைத்து மதிக்கும் பார்வையும் ஆணாதிக்க வெளிப்பாடும் காணப்பட்டது. பெண்களின் வாழ்க்கை நிலை உயர்ந்த மரியாதைக்கும், அதேசமயம் விமர்சனத்திற்கும் உட்பட்டிருப்பதையும் அவர் கூறிய பழமொழிகளிலுருந்து எம்மால் அறியமுடிந்தது.

உதாரணமாக 'கோடி ஒரு வெழுவ குமரி ஒரு பிள்ளை' என்ற பழமொழியில் கோடி என்பது புதிய துணியைக் குறிக்கின்றது. ஒரு துணியைத் துவைக்கும்போது எவ்வாறு அதன் புதிய தன்மை இழந்து போகிறதோ, அதுபோல ஒரு பெண் திருமணம் ஆகி குழந்தை பெற்றவுடன் அவளின் அழகு போய்விடும் என்ற கருத்தை வலியுறுத்துவதாக இந்தப் பழமொழி அக்காலகட்டத்தில் கூறப்பட்டதாக அந்தப் பாட்டி தெரிவித்தார்.



கல்யாணம் முடிஞ்சா கால் கட்டு, பிள்ளை பெத்தா வாய்க்கட்டு, தாயை தண்ணிக் கரையில பாத்தா பிள்ளைய வீட்டுல பாக்கவா வேணும், ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே, ஆண் இரங்கினால் கடன், பெண் இரங்கினால் புள்ளதாச்சி, ஒய்யாரக் கொண்டையில் தாளம்பூவாம், உள்ள பாத்தா ஈரும் பேனுமாம், முழுசா நனஞ்சவளுக்குகுளிரென்ன கூதல் என்ன, பெண்பாத்து வீடு புகும், பெண் என்றால் பேயுமிரங்கும், பெண்ணை நம்பினோன் பேய்க்கு அம்பு கொடுத்தான், சேலை கட்டிய மாதரை நம்பாதே, பொம்பிளை சிரிச்சா போச்சு போயில விரிஞ்சாப் போச்சு, பெண்ணின் கோணல் பொன்னிலே நிமிரும், கொண்டு வந்தால் மகாராசி இல்லாவிட்டால் பரதேசி, சாண் பிள்ளை ஆனாலும் ஆண் பிள்ளை வேண்டும், உண்டி சுருங்குதல் பெண்டிற்கழகு

இவ்வாறு எம்மால் ஆய்வுசெய்யப்பட்ட பழமொழிகளில் பெண்கள் தொடர்பில் குறிப்பிடப்படுவதை அவதானிக்க முடிந்தது. ஆரம்ப காலத்தில் பெண்கள் மீதான கட்டுப்பாடுகளும் எதிர்மறைப் போக்குகளும் அன்றைய காலங்களில் இருந்த பழமொழிகளில் எதிரொலிக்கின்றன. ஆனால், தற்காலத்துக்கு அவை பொருந்தப் போவதில்லை. ஏனெனில், இன்றைய பெண்கள் அறிவிலும் தைரியத்திலும் தலைமைத்துவத்திலும் சிறந்து விளங்குவதை அவதானிக்கமுடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ நடராசா கோபிராம்



# ஆளுமை விருத்தியுள்ள மாணவர்கள் உருவாக...!

ஆளுமை என்பதை ஒருவரிடம் காணப்படும் உடற்கவர்ச்சியின் அளவு என்று பலர் எண்ணுகின்றனர். அத்துடன் பிறரைக் காட்டிலும் குறிப்பிட்ட ஒரு பண்பிலோ, திறனிலோ மிகச் சிறந்து விளங்குவதனை சிறந்த ஆளுமை உடையவன் அல்லது உடையவள் என்கின்றனர். ஆனால் ஆளுமை தனியே இவ்வாறு என்று அமைவதில்லை. அது பரந்துபட்ட விளக்கத்தைத் தரக்கூடியது. பொதுவாக ஆளுமை என்பது ஒருவர் பெற்ற உடல், உள, சமூகப் பண்புகள், மனப்பான்மைகள், மனநிலைகள் எல்லாம் இணைந்தது ஆகும். இது ஒவ்வொரு தனிமனிதனிடமும் காணப்படுவதுடன் மக்களின் உறவுகள், சமுதாயக் குழுக்கள், சுற்றுச் சூழல் ஆகியவற்றுடன் தொடர்புபட்டதாகக் காணப்படுகின்றது.

பாடசாலை மாணவர்கள் அறிவு, திறன், மனப்பாங்கு, விழுமியம் போன்றவற்றின் ஊடாகத் தம்மைத் தேர்ச்சி அடையச் செய்வதே கல்வியின் பிரதான நோக்காகும். இவர்களை சமூகத்தில் நல்ல ஆளுமைமிக்க நபர்களாக உருவாக்குவதில் பாடசாலையின் பங்கு அளப்பரியது. பாடசாலை மாணவர்கள் எனும்போது அவர்கள் 5 முதல் 18 வயது வரை கல்விகற்பவர்களாகக் காணப்படுகின்றனர். இன்றைய காலகட்டத்தில் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி நன்மைகளை ஏற்படுத்தினாலும்கூட சவால்களையும், போட்டிமிக்க நெருக்கடிச் சூழலையும் உருவாக்கி உள்ளது. இவ்வாறான நிலையில் ஒவ்வொரு மனிதனும் ஆளுமையை வளப்படுத்துவது அவசியம். பிரதானமாகப் பாடசாலை மாணவர்கள் ஆளுமையை உரியமுறையில் விருத்திசெய்து மேம்படுத்திக்கொள்வதன் ஊடாக பல சவால்களையும் எதிர்கொண்டு சாதிக்க வழிவகை செய்கின்றது.

அந்த வகையில் பாடசாலை மாணவர்களின் ஆளுமை (பண்புத்திறன்) விருத்தியை மேம்படுத்த உதவும் உத்திகளை நாம் பார்ப்போம்.

### சுய முன்னேற்றப் பயிற்சிகள்

மாணவர்களைச் சுயமாக கற்றலை மேற்கொள்ள ஊக்குவித்தல் பிரதானமாகின்றது. பாடசாலைகளில் வகுப்பறைக் கல்வி நடவடிக்கையின்போதும், அது தவிர்ந்த பிற சூழல்களிலும் (வீடு, தனியார் கல்வி நிலையங்கள்) சுயகற்றல் மாணவர்களின் ஆளுமை விருத்திக்கு வழிவகுக்கின்றது. அத்துடன் தோல்விகள், தவறுகள் விடும் சந்தர்ப்பங்களில் அதிலிருந்து கற்றுக்கொள்ளும் மனப்பாங்குகளை வளர்த்துக் கொள்ளும் போது மாணவர்களது தம் சுய நம்பிக்கை, சுயவிழிப்புணர்வு என்பன விருத்தி அடைந்து அவர்களின் ஆளுமையும் விருத்தியடைகின்றது.

### இணைப்பாடவிதான செயற்பாடுகள்

தனியே பாடத்துறை சார்ந்த கற்றலை மேற்கொள்வதினால் மட்டும் ஆளுமையை விருத்திசெய்ய முடியாது. இணைப்பாடத்தின் ஊடாக சமூக நடத்தை, பழக்கவழக்கங்களைத் தெரிந்துகொள்வதுடன் சமூகத்திற்கு ஏற்றவகையில் வழிப்படுத்த உதவுகின்றது. பாடசாலையில் இடம்பெறும் கலை நிகழ்ச்சி, விளையாட்டுப்போட்டி, சாரணர் இயக்கம் முதலானவற்றில் ஆர்வத்துடன் பங்குபெறுதல் மற்றும் செயற்றிட்டங்களில் (கண்காட்சி, சிரமதானம், சுற்றுலா) பங்குபற்றுவதன் ஊடாக புதிய அனுபவங்கள், உற்சாகம், பொருந்தி வாழும் தன்மை, சேர்ந்து இயங்கும் தன்மை, விட்டுக்கொடுக்கும் தன்மை, தலைமைத்துவப் பண்பு என்பன ஏற்படுகின்றன. பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் (இலக்கியப் போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள், வினாடி வினாப் போட்டிகள், கலைப்போட்டிகள், பட்டிமன்றங்கள்) முதலானவற்றில் ஈடுபடுவதன் ஊடாக ஆளுமை விருத்தி மேம்பாடு அடைகின்றது.

### நல்ல உறவுகளை உருவாக்குதல்

மாணவர்களுக்கு நல்ல நட்புகளை உருவாக்கி, அவற்றைக் கையாளக் கற்றுக்கொடுக்கவேண்டும். நல்ல நட்பானது சீரான வழிகாட்டலுக்கும், வெற்றிக்கும் உறுதுணையாகி அமைவது மட்டுமல்லாது பிரச்சினைகள் அல்லது தடைகள் நோக்கிச் செல்லாது நேர்வழியிலே செல்ல வழிகாட்டுகின்றது. மற்றும் உள்ளூர், சர்வதேச மாணவர்களுடன் பரஸ்பரக் கலந்துரையாடல்களை ஊக்குவிப்பதன் ஊடாகவே மொழிப் பரிமாற்றம், தொடர்பாடல் விருத்தி, கலாசார விருத்தி ஏற்படுவதுடன் ஆளுமையும் விருத்தியடைகின்றது.

### நெறிப்படுத்தல் நடவடிக்கை

நேரம் எம் வாழ்வில் மிக முக்கியமாகின்றது. நேரமேலாண்மையை சரியாகப் பேணுவதன் ஊடாக பல விடயங்களைச் சரிவரச் செய்யவும், பல இன்னல்களைத் தவிர்க்கவும் உதவுகின்றது. நேரமேலாண்மையானது அன்றாடச் செயற்பாடுகளுக்கு நன்றாகவே உதவுகின்றது. எம் வாழ்வின் இலக்கை நிர்ணயித்து நடைமுறைப்படுத்துவதிலும் இதன்பங்கு அளப்பரியது.

### தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் தொடர்புத்திறன்

ஆரம்பத்தில் கூறியதுபோல இன்றைய உலகில் தொழில்நுட்ப வளர்ச்சி தடுக்கமுடியாததாகிவிட்டது. இவ்வாறான போட்டி உலகில் எமக்கு இவை பற்றிய அறிவை மேம்படுத்தும்போது ஆளுமை நன்றாகவே விருத்தியடைந்து செப்பனிடப்படுகின்றது.

மாணவர்களுக்கு மக்களுடன் நெருங்கி இடைவினை (தொடர்பு) கொள்ளும் நிலை தற்போது உலகில் குறைவாகவே காணப்படுகின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஆளுமை பாதிப்படையும். அதனால் மக்களுடன் நெருங்கிப்பழகி நம்பகத்தன்மை, முறைசார் உரையாடல் ஏற்படுத்திக்கொள்வதின் ஊடாக ஆளுமை விருத்தி மேம்படுகின்றது.

### உளநல மேம்பாடு

தவறான உந்துதல்கள் மற்றும் தூண்டல்கள், தீய பழக்கவழக்கங்களைப் பின்பற்றுவதைத் தவிர்த்தல், சரியான மனவளர்ச்சியைக் கையாளுதல், அதாவது சூழ்நிலைக்கேற்ப உணர்வுகளைச் சரியான முறையில் வெளிப்படுத்தல். இதற்கு ஆசிரியர்கள், பெற்றோர், பாடசாலை உளவளத்துணையாளரின் வழிகாட்டல் சிறந்தது. அத்துடன் பாரபட்சம், மூடநம்பிக்கைகளைத் தவிர்த்து அனைவரிடமும் அன்பு, நட்புடன் பழகுவதன் ஊடாக உளநலம் மேம்படுவதுடன் ஆளுமை விருத்தியும் அதிகரிக்கின்றது.

### தன்னம்பிக்கையை வளர்த்தல்

பாடசாலைகளில் மாணவர்களின் திறன்களைப் பாராட்டுதல் மற்றும் ஊக்கப்படுத்தலின் மூலமாக தன்னம்பிக்கை வளர்கின்றது. மாணவர்கள் பங்குபெறும் சிறு சிறு போட்டிகள், ஏன் நல்ல செயற்பாடுகள், பழக்கவழக்கங்கள், கருத்துகளை முன்வைக்கும் சந்தர்ப்பங்களிலும் வாழ்த்துதல், கைதட்டுதல், புகழ்தல் என்பனமூலம் அவர்களின் தன்னம்பிக்கையை மேலும் அதிகரிக்கமுடியும். முதியோர்களிடமிருந்து மற்றும் ஆசிரியர்களிடமிருந்து அவர்களின் கருத்துகள் மற்றும் வழிகாட்டல்களை மதித்து நடப்பதும் நல்லது.

### ஆரோக்கியமான வாழ்க்கைமுறை

உடல் நலம், உள நலத்தைப் பேணும் பழக்கவழக்கங்களினைக் கற்பது சிறந்தது. தினசரி உடற்பயிற்சி செய்தல் மற்றும் யோகாசனம், தியானம், இஷ்ட தெய்வ வழிபாடுகள், இனிய இசை கேட்டல் என்பன மனதை ஒருநிலைப்படுத்த உதவுகின்றன. மன அழுத்தத்தைக் குறைக்கவும் இவை உதவுகின்றன.

குழுவேலைமூலம் தலைமைத்துவம் மற்றும் ஒத்துழைப்புத்திறன் வளர்கின்றது. குழுச்செயற்பாட்டின் போது ஒற்றுமை, விட்டுக்கொடுப்புடன் பொறுப்புணர்வும் ஏற்படுகின்றது. தனிநபர் மற்றும் குழு அடிப்படையிலான திறன் பேச்சு மற்றும் சிந்தனையாழ்வுப் பயிற்சிகளை அதிகம் கற்றுக்கொள்வதன் ஊடாக ஆளுமை விருத்தி நன்றாகவே மேம்பாடு அடைகின்றது.

அத்துடன் வகுப்பறைக் குழுச்செயற்பாடுகளில் மாணவர்களைத் தமக்குத்தாமே உதவும் குழுவுடன் இணைத்தல்மூலம் ஆளுமை வளர்கின்றது. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹெகலியவுக்கு...

விட்டது. கடந்த அரசாங்கத்தின் காலத்தில் தரமற்ற இம்யூனோகுளோபுலின் தடுப்பூசிகளை வெளிநாடுகளில் இருந்து கொள்வனவு செய்து, அதன் மூலம் அரச நிதி மோசடி மற்றும் தவறான பயன்பாடு இடம்பெற்றதாக அவர்களுக்கு எதிராகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன.
இந்த வழக்கில் முன்னாள் அமைச்சருக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகள் தொடரப்பட்ட நிலையில், குற்றப் பத்திரங்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.
இதைத் தொடர்ந்தே, நேற்று அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.
அதன்படி, ஒவ்வொரு பிரதிவாதியும் தலா 5 இலட்சம் ரூபா பெறுமதியான ரொக்கப் பிணையிலும், தலா 5 மில்லியன் ரூபா மதிப்புள்ள இரண்டு சரீரப் பிணைகளிலும் விடுவிக்கப்பட்டுள்ளனர். (அ-ம)

## நிறைவேற்று...

வதைவிட, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை முழுமையாக இரத்துச் செய்வது மேலானது.
நாட்டின் தேவைக்காக அல்லாமல், தனிநபர்களை இலக்கு வைத்தே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. உதாரணமாக, மஹிந்தவை அரச இல்லத்தில் இருந்து வெளியேற்றவேண்டும் என்பதற்காகவே ஒட்டுமொத்த ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளும் நீக்கப்பட்டன. மஹிந்தவை வீட்டில் இருந்து வெளியேற்றுவதால் எதுவும் நடக்கப்போவதில்லை. நாம் முன்பைவிட பலமாக இருக்கின்றோம். மேலும் வலுவடைந்து வருகின்றோம்.
இன்று அரச ஊழியர்களால்கூட சுதந்திரமாக முடிவுகளை எடுக்க முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது. 15 வருடங்களுக்கு முன்னர் எடுக்கப்பட்ட முடிவொன்றுக்காகக்கூட சிறைக்குச்செல்ல வேண்டிய நிலை உள்ளது - என்றார். (அ-ம-44)

## நாமல்...

யும் பொதுஜன பெரமுன பெரிதும் மதிக்கிறது. எமது உறவை மேலும் வலுப்படுத்த நாங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்' என்று சந்தோஷ் ஜாவுடனான சந்திப்புத் தொடர்பில் தனது எக்ஸ் தளத்தில் நாமல் ராஜபக்ச பதிவிட்டுள்ளார்.
சில தினங்களுக்கு முன்னர், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை சீனத் தூதுவர் ஷென் ஹொங் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தியிருந்தார். இவ்வாறான பின்னணியிலேயே, நாமல் ராஜபக்சவை இந்தியத் தூதுவர் சந்தித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## செப்.20ஆம்...

வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல்துறையின் தலைவரும், வானிலை ஆய்வாளருமான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-
எதிர்வரும் சனிக்கிழமை தொடக்கம் வடக்கின் பல்வேறு பகுதிகளிலும் மிதமானது தொடக்கம் கனமானது வரையான மழை வீழ்ச்சி கிடைக்கப்பெறும்.
இந்த மழை மேற்காவுகைச் செயற்பாட்டால் கிடைக்கும் மழை என்பதனால் முற்பகலை விடப் பிற்பகலில் அல்லது இரவில் அதிக மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. அத்துடன் இடிமின்னலுடன் கூடியதாகவே இந்த மழை கிடைக்கும் - என்றுள்ளது. (அ-ம-66)

## மண்டைதீவுப்...

ஆண்டு ஒகஸ்ட் மாதம் பிற்பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது, மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான், காரைநகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த எண்பதுக்கும் அதிகமான இளைஞர்களும் யுவதிகளும் இராணுவத்தால் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டிருந்தனர்.
அவர்களில் பலர் படுகொலை செய்யப்பட்டு, சடலங்கள் மண்டைதீவுப் பகுதியில் உள்ள சில கைவிடப்பட்ட கிணறுகளில் வீசப்பட்டு புதைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. அந்தக் கிணறுகளையே அகழ்ந்து நீதியை நிலைநாட்டுமாறு ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் முறையிடப்பட்ட நிலையில், இது தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகளே இன்று ஆரம்பிக்கப்படவுள்ளன. (அ-ம-26)

## பருத்தித்துறைச்...

பருத்தித்துறை பிரதேச செயலக அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன் தலைமையில் நடைபெற்றது.
இதன்போது பருத்தித்துறையில் நிலவும் போக்குவரத்துப் பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. குறிப்பாக, 751 வழித்தடத்தின் போக்குவரத்துச் சேவையில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பிலும், கிளிநொச்சி, அறிவியல்நகர் மற்றும் கட்டைக்காடு ஆகிய பகுதிகளுக்கான போக்குவரத்தில் பெரும் சீர்குலைவுகள் காணப்படுகின்றன என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.
இதையடுத்து இ.போ.ச. பருத்தித்துறைச் சாலை முகாமையாளர் தெரிவித்ததாவது:-
பருத்தித்துறை சாலையில் 68 சாரதிகள் இருக்கவேண்டிய இடத்தில் 37 சாரதிகள் மட்டுமே காணப்படுகின்றனர். அண்ணளவாக 50 வீதமான ஆளணிப் பற்றாக்குறை காணப்படுகின்றது. சாரதிகள் தமது கடமையை ஓய்வின்றியே மேற்கொண்டு வருகின்றனர்.
அத்துடன், கொழும்பில் இருந்து அதிகாலையில் பருத்தித்துறைக்கு வரும் பேருந்தே காலையில் கச்சேரி ஊடான யாழ்ப்பாண சேவைக்கும் பயன்படுத்தப்படுகின்றது. எனவே, ஆளணிப் பற்றாக்குறைகள் மற்றும் வளப்பற்றாக்குறைகள் நீக்கப்படும் பட்சத்தில் கடமைகளை மிகச்சிறப்பாக முன்னெடுக்கமுடியும் - என்றார். (அ-ம-26)

## யாழ்ப்பாணம்...

கழகத்திலும் மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானம், மருந்து வேதியல் மற்றும் தாதியம் தொடர்பான துறைகளில் மூன்று விஞ்ஞானமாணி பட்டப்படிப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைச் சுகாதார விஞ்ஞான பீடத்தில் அனைத்து இனத்தவர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி நான்கு பாடத்துறைகளில் 952 மாணவர்கள் கற்கைகளில் ஈடுபடுகின்றனர்.
2017ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் துணைச் சுகாதார விஞ்ஞான பீடத்துக்கான கட்டடத்தை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டது. எனினும், நிதி நெருக்கடிகள் காரணமாக அந்த நிதி விடுவிக்கப்படவில்லை. இதையடுத்தே, தற்போது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் துணைச் சுகாதார விஞ்ஞான பீடத்துக்கான விரிவுரை மண்டபங்கள், ஆய்வுகூடம், ஆய்வுக்கட்டுரை அறை, ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபம் மற்றும் கேட்போர் கூடத்துடன் கூடிய புதிய ஐந்து மாடிக் கட்டடமொன்றை 2 ஆயிரத்து 234 மில்லியன் ரூபா மதிப்பீட்டுச் செலவில் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார். (அ-ம-26-44)

## உருக்குலைந்த...

வரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.
வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டார். (அ-ம-26)

## பண்ணை...

உத்தரவிட்டுள்ளார். யாழ்ப்பாணம் பண்ணைச் சுற்றுவட்டாரப் பகுதியில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான வீதிக்கு மிக அருகாமையில் தொல்லியல் திணைக்களத்தால் எல்லைக் கற்கள் நடப்பட்டுள்ளன. அந்தப் பகுதியில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் நேற்று ஆய்வுப் பணிகளை மேற்கொண்டார்.
இதன்போது, தொல்லியல் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் பந்துல ஜீவ சம்பவ இடத்துக்கு அழைக்கப்பட்டு, தொல்லியல் திணைக்களத்தால் அமைக்கப்பட்டுள்ள 48 எல்லைக் கற்களாலும் வீதி விபத்துக்கள் ஏற்படும் ஆபத்து உள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. இந்த எல்லைக் கற்கள் அனைத்தையும் அகற்றிவிட்டு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அளவுப் பிரமாணங்களுக்கமைய, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் எழுத்துமூல அனுமதியைப் பெற்று எல்லைக் கற்களை நடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மாவட்டச் செயலரால் அறிவுறுத்தப்பட்டது. (அ-ம-26-66)

## புலம்பெயர்...

களின் வாக்குரிமையும் உறுதிப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார தேர்தல் பரப்புரைகளின்போது கூறியிருந்தார். இதன் தொடர்ச்சியான நடவடிக்கைகளின் விளைவாகவே, புலம்பெயர் இலங்கையர்களின் வாக்குரிமையை உறுதிப்படுத்தும் நடவடிக்கைக்காக குழுவொன்றை அமைக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.
இது தொடர்பில் அமைச்சர் நளிந்த மேலும் தெரிவித்ததாவது:-
தேருநர் இடாப்பில் பெயர் பதிவுசெய்யப்பட்டுள்ள அதேநேரம் இலங்கையில் வசிக்கின்ற மக்களுக்கு மட்டுமே தற்போது வாக்குரிமை காணப்படுகின்றது. வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்கள் தேர்தல்களில் வாக்களிப்பதற்கான முறைகளோ அல்லது சட்டங்களோ தயாரிக்கப்படவில்லை. இந்தியா, பங்களாதேஷ், பிலிப்பைன்ஸ் ஆகிய ஆசிய நாடுகள் தமது வெளிநாட்டுப் பிரஜைகளுக்கு வாக்களிக்கச் சந்தர்ப்பத்தை வழங்குகின்றன. அவ்வாறான நடைமுறையை இலங்கையில் ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளோம்.
இதற்கமைய தேர்தல் ஆணைக்குழு, வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு, பொதுநிர்வாக, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் ஏனைய ஏற்புடைய அமைச்சுகள் மற்றும் நிறுவனங்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கி குழுவொன்றை அமைக்கத் தீர்மானித்துள்ளோம் - என்றார். (அ-ம-44)

## மணல்...

வடமராட்சி வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டம் வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் ந.திரிலிங்கநாதன் மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக்குழு தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெ.ரஜீவன் தலைமையில் நேற்று இடம்பெற்றது.
இதன்போது வடமராட்சியில் அதிகரித்து வரும் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பிலும், கற்கோவளம் பகுதியில் மணல் மாபியாக்களால் மீனவர்கள் தாக்கப்பட்டமை தொடர்பிலும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெ.ரஜீவன் கேள்வி எழுப்பினார். இதற்கு, 'பொலிஸ் திணைக்களத்தில் ஆளணிப் பற்றாக்குறை காணப்படுகின்றது. ஆதலால், இந்த விடயத்தில் எதையும் எம்மால் செய்ய முடியாதுள்ளது. இராணுவத்தினர் அல்லது விசேட அதிரடிப்படையினரின் ஒத்துழைப்புக் கிடைக்கும் பட்சத்தில், இந்த விடயத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்' என்று பருத்தித்துறை பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரி பிரியந்த அமரசிங்க தெரிவித்தார்.
இதன்போது, பணியிடைநீக்கம் செய்யப்பட்டிருக்கும் பொலிஸார் ஒருவர், சொந்தமாக டிப்பர் வாகனங்களை வைத்துக்கொண்டு வடமராட்சியில் சட்டவிரோத மணல் கடத்தலில் ஈடுபட்டு வருகின்றமை தொடர்பில் ஒளிப்பட ஆதாரங்களுடன் ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரால் சுட்டிக்காட்டப்பட்டது. இதையடுத்து, 'இந்த விடயம் தொடர்பில் கவனம் எடுக்கப்படும்' என்று பருத்தித்துறை பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரி பிரியந்த அமரசிங்க கூறினார்.
பருத்தித்துறை நகர முதல்வர் வி.டக்ளஸ் போல், வல்வெட்டித்துறை நகர முதல்வர் தவமலர், பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் உ.யுகதீஸ், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகர சபைகள் மற்றும் பருத்தித்துறை பிரதேச சபை என்பவற்றின் செயலாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், திணைக்களங்களின் பிரதிநிதிகள், பொலிஸ், இராணுவ அதிகாரிகள், சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ-ம-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தியாகதீபம் தீலிபனின் இரண்டாம் நாள் நினைவேந்தல் நேற்று நல்லூரில் அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது சுடரேற்றி மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது. (சு-20)

# பொருளாதார நெருக்கடி; பாலியல் தொழில் உயர்வு

கொழும்பு, செப்.17

**இலங்கையில் கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாகப் பல பெண்கள் பாலியல் தொழிலை நாடியுள்ளனர். அதேநேரம், சுற்றுலா விசாவில் வரும் வெளிநாட்டுப் பெண்களும் இணையத்தளப் பாலியல் தொழிலில் ஈடுபட்டு வருவது கண்டறியப்பட்டுள்ளது.**

இதுதொடர்பில் பொலிஸ் பேச்சாளர் எப்.யூ. வூட்லர் தெரிவிக்கை யில், இலங்கையில் இணையவழிப் பாலியல் தொழில் வேகமாக அதிகரித்துவருவது குறித்துப் பொலிஸார் தீவிர கவனம் செலுத்தி வருகின்றனர்.

பல இணையத்தளங்கள் மற்றும் மொபைல் செயலிகள் மூலம் தினமும் நூற்றுக்கணக்கான பாலியல் சேவைகளுக்கான விளம்பரங்கள் பகிரப்படுகின்றன.

இந்தச் சேவைகளுக்கான கட்டணங்கள், சேவையின் வகையைப்பொறுத்து மாறுபடுகின்றன.

இவை இணையத்தள மோசடிகளுடன் தொடர்புடையவை என்றும், வாடிக்கையாளர்களிடமிருந்து பணம் பெற்றுக் கொண்டு சேவையை வழங்காத சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

பொது அவமானம் மற்றும் சமூக களங்கத்திற்கு அச்சமடையும் பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் முறைப்பாடுகள் அளிப்பதில்லை என்பதால், சட்டநடவடிக்கைகளைத் தொடர்வது கடினமாக உள்ளது என்று பொலிஸாரால் கூறப்படுகின்றது.

இந்தச் செயல்களில் ஈடுபடும் நபர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (சு-இ)

## கடந்த வாரத்தில் மட்டும் 257 நாய்களுக்கு கருத்தடை!

யாழ்ப்பாணம், செப். 17

வடக்கு மாகாண ரீதியாக முன்னெடுக்கப்பட்டுவரும், பெண் நாய்களுக்கான இலவச கருத்தடை சிகிச்சைத் திட்டத்தின் கீழ் கடந்த வாரத்தில் மட்டும் 257 நாய்களுக்கு கருத்தடை செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் அ.சோதிநாதன் தெரிவித்ததாவது:-

கட்டாக்காலி நாய்களால் ஏற்படும் விபத்துக்கள் அதிகரித்துவரும் சூழலில் அதனைக் கட்டுப்படுத்தும் முகமாகவும், விலங்கு விசர் நோயைக் கட்டுப்படுத்தும் வகையிலும் வடக்கு மாகாணத்தின் மூன்று அமைச்சுக்கள் இணைந்து முன்னெடுக்கும் மூன்றாண்டு காலச் செயற்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இதற்கு அமைவாக கடந்த புதன்கிழமை தொடக்கம் நல்லூர் மற்றும் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைகளுக்குட்பட்ட பகுதிகளில் பெண் நாய்களுக்கு இலவசமாக கருத்தடை சத்திர சிகிச்சை மேற்கொள்ளும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த வாரம் இன்று புதன்கிழமை தொடக்கம் சனிக்கிழமை வரை நல்லூர் மற்றும் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைகளுக்குட்பட்ட பகுதிகளில் மேற்படி செயற்பாடு முன்னெடுக்கப்படுவதுடன் வலிகாமம் தெற்குப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளிலும் முன்னெடுக்கப்படவுள்ளது. தொடர்ந்து மாகாணத்தின் ஏனைய இடங்களிலும் கால அட்டவணைப் படி இந்தச் செயற்பாடு இடம்பெறும்.

பொதுமக்கள் தமது வீடுகளில் உள்ள பெண் நாய்களைக் கொண்டு வந்து குறித்த தினங்களில் இலவசமாக சத்திர சிகிச்சை மேற்கொள்ள முடியும். அதேவேளை நாய்களைப் பிடித்து வழங்க விரும்புபவர்கள் நாய் பிடிப்பாளர்களாக பிரதேச சபைகளில் பதிந்து தமக்கான முற்தடுப்பு ஊசிகளைப் பெற்று நாய்களைப் பிடித்து வழங்க முடியும். பிடித்து வழங்கும் நாய் ஒன்றுக்கு 600 ரூபாவைப் பெற்றுக் கொள்ளமுடியும் - என்றார். (ம-26-66)

## நிலுவையிலுள்ள ஆதனவரியை செலுத்த பணிப்பு

பிரதேசசபைக்குட்பட்ட பொது அமைப்புகள் நிலுவையில் உள்ள ஆதன வரியைச் செலுத்த வேண்டும் என்று வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேசசபைத் தவிசாளர் பா.பாலேந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பிரதேசசபை யால் ஆதனவரி மதிப்பீடு தொடர்பான பணிகள் வட்டார ரீதியாக முன்னெடுக் கப்பட்டுவருகின்றன. பொதுமக்கள் தாங்களாகே வருகை தந்து வரிப்பணத்தைச் செலுத்துவதை அவதானிக்க முடிகின்றது. மக்களின் வரிப்பணத்தின்மூலம் வட்டாரங்களில் உள்ள குறைபாடுகளைச் சீர்செய்வதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து வருகின்றோம். குறிப்பாக கிராமங்களில் உள்ள பொது அமைப்புகள் ஆதனவரியைச் செலுத்தாத நிலைமை உள்ளது. எனவே அவர்கள் தாங்களாக முன்வந்து நிலுவையில் உள்ள தொகையைச் செலுத்தவேண்டும். அதேவேளை நடமாடும் சேவைகள் மூலமாகவும் வரிசெலுத்துவதன் முக்கியத்துவம் தொடர்பாக மக்களுக்கு நாம் தெளிவூட்டி வருகின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-110)

**மணல் விற்பனைக்கு**

கட்டிட வேலைகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற பழுப்பு நிற மணல் விற்பனைக்கு உண்டு.

- தென்மராட்சி 45,000
- யாழ்மாவட்டம் 50,000
- வடமராட்சி 50,000

விநியோகிக்கப்படும். மற்றும் கனரக வாகனங்களுக்கு யாழ் மாவட்ட வீதி அனுமதிப்பத்திரம் போட்டு தரப்படும்.

தொடர்பு: 076 324 9977

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ் கோப்பாய் ராசபாதை வீதியில். Training college முன்பாக 18 பரப்பு காணி 20 அடி பாதையுடன் இரண்டு இரண்டு பரப்பாக பிரித்து விற்பனைக்கு உண்டு.

- குடியிருப்பு சூழல்
- நல்ல நீர்க் கிணறு
- செம்மண் தறைக்காணி
- பிரதான போக்குவரத்து சேவை பஸ் செல்லும் வீதி முன்பாக.

பார்வையிடும் நேரம்:- காலை 6.00 - மாலை 6.00 வரை

தொடர்புகளுக்கு:- விமல்

076 755 8606, 077 638 5683



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org